# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 3 | ஞாயிறு 12-11-39 பிரமாதிஸு ஐப்பசிமீ 27உ | முத்து 7 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... ... ... | | 204 |
| கடலோரக் கிளிஞ்சல்கள் ... ... ... ... ... ... | | 206 |
| திருவாங்கூரின் இரு கண்கள் ... ... ... ... ... | | 207 |
| தொழிற்சாலையும் குடிசைத் தொழிலும் ... ... ... ... | | 208 |
| மைசூரின் சீர்திருத்தம் ... ... ... ... ... ... | | 208 |
| "நமது சங்கீதத்திற்கு" ஓர் மறுப்பு ... | ஸி. சுப்ரமண்ய அய்யர் | 210 |
| சங்கீதத்தில் ஜாதிபேதம் ... ... | ஏ. என். கலியாணசுந்தரம் | 211 |
| சினிமாப் பித்து ... ... ... | எஸ். ஸோமாஸ்கந்தன் | 212 |
| பொய்யர் சங்கம் ... ... ... | ஏ. என். கலியாண சுந்தரம் | 215 |
| எச்சுப் பாட்டி ... ... ... ... | வல்லிக்கண்ணன் | 217 |
| கிராம சேவை .... ... ... | ராவ் சாகேப். கே. சுப்ரமண்யம் | 219 |
| சிறுவர் பகுதி ... ... ... ... ... ... ... | | 221 |
| புத்தக விமர்சனம் ... ... ... ... ... ... | | 223 |
| சினிமாச் சுருள் ... ... ... ... ... ... | | 224 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# உலக வர்த்தமானம்

**அயல் நாடுகளில் :—**

பால்கன் நாடுகளைப் பற்றிய சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஹாலந்தும், ஸ்விட்ஸர்லாந்தும், யுத்த ஏற்பாடுகளை மும்மரமாகச் செய்து வருகின்றன. ஹாலந்தில் 1914ல் செய்தது போலவே நாட்டில் சிற்சில பகுதிகளில் கடலில் கட்டியிருந்த அணையை உடைத்து வெள்ளப்படுத்தி விட்டார்கள். பின்லாந்து ரஷ்யாவின் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறது, "ரஷ்யா கூறிய ஒப்பந்தப்படி பின்லாந்தின் சுதந்திரத்தைத் தியாகம் பண்ண மாட்டோம். ரஷ்யாவுக்கு எதிராக இந்நாடு ஒன்றும் செய்யாது" என்று அயல் நாட்டு மந்திரியான, எம். எர்க்கோ சபையில் கூறியிருக்கிறார். மறுபடியும் ரஷ்யா அநேக தாதுப்பொருள்கள் கிடைக்கும் சுரங்கங்கள் சிதறிக் கிடக்கும் பெட்ஸாமோ என்னும் பிரதேசத்தைக் கொடுக்கும்படியாகவும் அதற்குப் பதிலாக லடோகா கடலின் மேற் பாகத்திலிருக்கும் பிரதேசத்தைக் கொடுப்பதாகவும் பின்லாந்துக்கு ஓர் அறிவிப்பு விடுத்தது. இதையும் அந்நாடு நிராகரித்தது. இதனால் நிலைமை நெருக்கடியாகலாமென்று தோன்றுகிறது.

ரஷ்ய அந்நிய நாட்டு மந்திரி மாலடோவ் "ஜெர்மனி சமாதானத்திற்குப் போராடும் பொழுது நேச நாடுகள் யுத்த சன்னத்தர்களாய் இருப்பது அழகல்ல,

"வர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் சிருஷ்டியான போலந்தை மறுபடியும் புனருத்தாரணம் பண்ணுவது முடியாத காரியம் என்றும்" காரசாரமாகப் பேசியிருக்கிறார். இதற்கு நேச நாடுகளும், அவைகளுடைய உதவி நாடான அமெரிக்காவும் ஆணித்தரமான பதில் கொடுத்திருக்கின்றன.

ஐரோப்பாவின் தற்காலீக யுத்த களமெனச் சொல்லப்படும் மேற்கெல்லையில் யுத்த ஆயத்தம் பலமாக நடந்து வருகிறதே யொழிய இரு திறத்தாரும் கை கலந்தபாடில்லை. ஜெர்மனி எதிரிகளை எதிர்ப்பதைத் தற்போது போதிய பலமில்லாததால் காலதாமதப்படுத்தி வருகிறதென்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் சேனைத் தளகர்த்தர்களுக்குள் சில கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் பாரிஸ் செய்தி கூறுகிறது. ஜெர்மனி மேற்கெல்லையில் சில யுத்த தந்திரங்களை அனுஷ்டித்துச் சுலபமாக எதிரிகளைத் தாக்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றது. ஜெர்மனி கூடிய சீக்கிரத்தில் இங்கிலாந்தின் மேல் படை யெடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வில்னுவில் யூத எதிர்ப்புக் கலகம் நடந்ததில் அநேக யூதர்களின் வீடுகளும், கடைகளும், தகர்க்கப்பட்டன. இக் கலகத்தைத் துருப்புகள் வந்து தடுத்து சமாதானத்தை நிலை நிறுத்தியது. கலகத்தினால் கஷ்டமடைந்த யூதர்கள் சோவியத் ரஷ்யாவுடன் தங்களைச் சேர்க்கும்படி கூறியிருக்கிறார்கள்.

ரஷ்யாவும் ஜப்பானும் சமாதானப் பேச்சுப் பேசும்பொழுது "சோவியத் ரஷ்யா, சைனுத் தலைவனான மார்ஷல் ஷியாங் கே-ஷெக் என்பவனுக்கு உதவி செய்வதிலிருந்து நின்றால்தான் ஜப்பான் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் பேசும்" என ஜப்பானியத் தலைவர் கூறினர்.

அமெரிக்காவில் ஆயுத ஏற்றுமதியைத் தடுத்த சட்டத்தை எதிர்த்து 243 நபர்களும், அதை ஆதரித்து 172 நபர்களும் வோட்டுக் கொடுத்தார்கள். இதைக் கேட்ட நேசநாடுகள் குதித்தெழுந்தன. எதிரிகளோ பல்லை நறநறவென்று கடித்தனர்! 'நேசநாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி செய்வது, அந்நாடுகளும் அதனுடைய எதிரிகளும் பலத்தில் சமமாக இருக்கும் பொருட்டே"யென சிகாகோ டெய்லி

நியூஸ் பத்திரிகை கூறுகிறது. இதனால் இனிமேல் நேசநாடுகள் யுத்த கருவிகளுக்கு அமெரிக்காவை அண்டலாமெனத் தெரிகிறது. அமெரிக்காவும் கணக்கில்லாத விமானங்களும், டாங்குகளும், யுத்தக் கப்பல்களும், ஸப்மெரின்களும் தயாரித்து வைத்திருக்கின்றது. அதை அனுப்பவேண்டியதுதான் பாக்கி.

தென் போலந்திலிருந்த 22,000 யூதர்கள் கிழக்குப் போலந்திலிருக்கும் லுப்லின் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஹெர் ஹிட்லர் வார்ஸாவைச் சுற்றி ஓர் சிறிய போலந்து சமஸ்தானத்தை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்வதாகவும், அதை ஆள ஓர் போலந்து அரசனைத் தேடிக்கொண் டிருப்பதாகவும் தெரிகிறது, சைனுவிலுள்ள ஹ்யூபே மாகாணத்தில் மற்றொரு பொம்மை ராஜ்யம் ஜப்பானியர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மாலடோவ் மறுபடியும் மாஸ்கோவிலிருந்து நேசநாடுகளின் யுத்தப்போக்கை கண்டித்துப் பேசியிருக்கிறார். முதலாளிகளின் கொடுமையினுல் இவ்வுலகம் அநியாய யுத்தத்தில் சிக்கித் தவிக்கிறதென்றும், ரஷ்யா சமாதானத்தை நிலைநிறுத்த வெகு பாடுபடுகிறதென்றும் கூறினுர்.

**உள் நாட்டில் :—**

நாட்டில் வியவகாரங்கள் மிகவும் நெருக்கடியாக இருக்கின்றன. காந்திஜீ ஜனுப் ஜின்னுவைப் பலதரம் கண்டு பேசினுர். அதன் முடிவு மிகவும் வருந்தத்தக்க விஷயம். "இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக் ஒன்றுதான் முக்கிய கக்ஷி யென்று காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொண்டால் மேலே நடக்கவேண்டியதைப் பற்றிப் பேசலா" மென்று ஜனுப் ஜின்னு கூறினுர். இதைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லாததினுல் அப் பேச்சு முறிவடைந்தது. ஜனுப் ஜின்னு கூறியதைப் பல முஸ்லிம்கள் பலமாக எதிர்த்தார்கள்.

இந்தியாவைப் பற்றிப் பார்லிமெண்டில் பேசியபொழுது லார்டு ஜட்லண்டு, அறியாத்தனத்தால், "காங்கிரஸ், இந்தியாவின் பெரிய கக்ஷியாக இருந்தாலும், அது ஹிந்துக்களையே பெரும்பான்மையாக ஆதரிப்பதாலும், முஸ்லிம் லீக்குக்கும் காங்கிரஸுக்கும் சமரசம் ஏற்பட்டாலொழிய எவ்வித சீர்திருத்தமும் நடத்த சௌகரியமாக இருக்காது" என்று கூறினுர்.

இதற்குப் பதிலாகக் காந்திஜி ஜட்லண்டுக்கு ஓர் சாட்டை கொடுத்திருக்கிறுர். "லார்டு ஜட்லண்டின் அறியாமைக்கு மிகவும் வருந்துகிறேன். காங்கிரஸில் ஹிந்துக்கள் அதிகமாக இருந்தாலும், அதில் மற்ற வகுப்பினர்கள் கூட அதிகமாக இருக்கிறுர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. இதனுல் காங்கிரஸ் ஹிந்துக்கள் சபை இல்லையென்றும், அது ஓர் தேசியக் கக்ஷியே என்றும் தெரிகிறதல்லவா? இந்தியாவுக்கு வேண்டுவதை இந்தியர்களே சிருஷ்டித்துக் கொள்ளவேண்டுமே யொழிய, ஆங்கிலேயர்களுக்கு இங்கு வேலை இல்லை" யெனக் கடுமையாகவே பேசியிருக்கிறுர்.

டில்லியில் நடந்த சமாதானப் பேச்சுகள் முறிந்துவிட்டன. "காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படாததுபற்றி நான் வருந்துகிறேன்" என்று வைஸ்ராய் ஆகாயவசனியில் கண்ணீர் விட்டார். "இருந்தாலும் ஓர் முடிவுக்கு வர நான் முயன்றுகொண்டு வருகிறேன்." என்றும் கூறுகிறுர்.

சென்னை கவர்னருடைய உத்தியோக காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் நிலைமையை உத்தேசித்து நீடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கார்ப்பொரேஷன் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீமான் ஆதிகேசவலு நாயக்கர் உதவி மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். "இந் நகரத்தை எவ்வளவு தூரம் அழகுபடுத்த முடியுமோ அவ்வளவு தூரம் முயற்சி செய்கிறேன்" எனக் கூறியிருக்கிறுர் சத்தியமூர்த்தி.

# கடலோரக் கிளிஞ்சல்கள்

இந் நாள் வரையிலும் தினசரிப் பத்திரிகைகளும், வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் மேல்நாடுகளில் உற்பத்தி செய்த காகிதங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்துகொண் டிருந்தன. இப்பொழுதோ யுத்தத்தினுல் வெளிநாடுகளிலிருந்து காகிதஏற்றுமதி தடைப்பட்டிருக்கிறது. ஆதலால், பல தொழிலாலயங்கள் உள்நாட்டிலேயே "நியூஸ் பிரின்ட்" என்று சொல்லும் காகிதத்தை ஏராளமாக உற்பத்தி செய்ய முயன்று வருகின்றன. அக்கம்பெனிகளில் "மைசூர் பேப்பர் மில்ஸ்" ஒன்று. அரசாங்கத்தாரின் ஆதரவின் கீழ் வளரும் வலி மிகுந்த எருமை மாட்டின் (பைஸன் மார்க்) அடையாளங்கொண்ட காகித உற்பத்திக் கம்பெனி, சில தினசரிப் பத்திரிகைகளின் வேண்டுகோளுக்கிணங்கி "நியூஸ்பிரின்ட்" காகிதத்தை உற்பத்தி செய்ய முன் வந்திருக்கிறது.

*  *  *

டிர் நவாப்பும் கார்கானும், அவர்களுடைய நாட்டின் எல்லையில் ஒரு சிறு யுத்தம் ஆரம்பித்துவிட்டார்களாம். டிர் சமஸ்தானத்திலிருந்த கான்ஸாடா மாலிக்கினிடமிருந்து கார்சமஸ்தானத்திலிருந்த மாலிக் அப்துர் ரஹீம் தன்னுடைய வலிமையினுல் சில நிலங்களை அபகரித்துக்கொண்டானும். கான்ஸாடா மாலிக், டிர் நவாப்பிடம் முறையிடவே, அவன் கான்ஸாடாவுக்குத் தன்னுடைய பாசறையிலிருந்து ஏகப்பட்ட ஆயுதங்களையும், தன்னுடைய சைன்யத்திலிருந்து சில வீரர்களையும் கொடுத்துதவினுன். இதைக் கண்ட மாலிக் அப்துர் ரஹீம், கார்கானிடம் சரண் புகவே, அவன் தன்னுடைய சைன்யத்தில் ஒரு பகுதியைக் கொடுத் துதவினுன். மேற்சொன்ன செய்தி பழைய தேச சரித்திரமல்ல. இப்பொழுது வடக்கே பெஷாவருக்குச் சிறிது தூரத்தில் இந்த யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. கார்கானின் விமானப் படை டிர் சமஸ்தானத்தின் தலைநகரத்தைக் குண்டுகளால் தாக்குவதாக நடுநிலை வகிக்கும் டபார் சமஸ்தானத்திலிருந்து ந. நி. ஓர் செய்தி விடுத்திருக்கிறுர்.

*  *  *

காலஞ் சென்ற டலைலாமா 1933-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 12-ந் தேதி மரணமடைந்தார். இதன் பிறகு பதினெட்டு மாதங்கள் கழித்து 1935-ம் வருஷம் ஜூலை மாதம் 5-ந் தேதி இப்பொழுது புதிய டலைலாமாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிறந்தார். முன்பிருந்தவர் இறப்புக்கும், இப்பொழுதிருப்பவர் பிறப்புக்கும் நடுவிலிருக்கும் காலத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறுர்கள். இறந்த டலைலாமாவின் ஆன்மா, மறுஜென்மம் எடுப்பதற்கு எந்த உத்தமி வயிற்றில் பிறக்கலாம் என்று தேடிப் பார்த்துக்கொண்டிருந்தாரென்றும், கடைசியில் புதிய டலைலாமாவின் அன்னை வயிற்றில் ஜனித்தாரென்று சொல்லப்படுகிறது.

*  *  *

'கஞ்சீவரம்' 'காஞ்சீபுர'மான புராண வரலாறு கஞ்சீவரம் கௌன்ஸிலில் நடிக்கப்பெற்றது. பலர் பழைய காஞ்சியின் பெருமையை வானளாவப் பேசிப் புகழ்ந்தார்கள். சிலர் கஞ்சீவரத்தின் தற்காலப் பெருமையைப் பற்றிச் சண்டமாருதமாகப் பேசினுர்கள். இரு தரத்தாரும் கடுமையாக வாதாடவே, அதன் பயன் காஞ்சியாக முடிவடைந்தது. கௌன்ஸிலர்களும் "காஞ்சி கௌன்ஸில்" என சபைக்குத் திருநாம மிட்டு வெளிப் போந்தனர்!

# திருவாங்கூரின் இருகண்கள்

மைசூரின் முன்னேற்றத்திற்கு மஹாராஜா கிருஷ்ண ராஜேந்திராவும், திவான் மீர்ஸா இஸ்மெயிலும் காரண பூதர்களாய் இருப்பது போல, திருவாங்கூரின் முன்னேற்றத்திற்கு ஸ்ரீ சித்திரைத் திருநாளும், ஸர். ஸி. பி. ராமஸாமி அய்யரும் காரண பூதர்களாய் இருக்கிறார்கள். இவ்விரண்டு சமஸ்தான மஹாராஜாக்களும் தெய்வபக்தி நிறைந்தவர்கள். மைசூர் மஹாராஜாவின் குலதெய்வம் மலைமீதிருக்கும் சாமுண்டேஸ்வரி. திருவாங்கூர் மன்னனின் குல தெய்வம் அலைமோதும் கடற்கரையிலிருக்கும் பத்மநாப ஸ்வாமி. திருவாங்கூர் மன்னன் பத்மநாப ஸ்வாமியின் தாசன். எவரும் அடைய முடியாத பதவி. அவருடைய தெய்வ பக்தி குடிகளின் மேல் அவர் கொண்டுள்ள அன்புக்குக் காரணம். அப்பக்தி அவர் மனத்தில்உயர்ந்த லக்ஷ்யங்களையும், சிறந்த எண்ணங்களையும் தூண்டுகிறது. சுருங்கச் சொல்லின், குடிகளின் நன்மையை உத்தேசித்தே அவரைப் படைத்தார் ஈசன் என்பதே பொருந்தும். இன்றும் திருவாங்கூரை அங்கே எழுந்தருளியிருக்கும் பத்மநாபஸ்வாமி அர்சாள்வதாகவே ஓர் ஐதீகம். பாஸ்கரன் உதித்ததும் நீராடி, திலகமிட்டுப் பட்டாடை யுடுத்தி, உருவிய வாளைக் கையிலேந்தி, பத்மநாப ஸ்வாமியின் சன்னதியிற் சென்று, அவரைப் பணிந்து, அவருடைய அனுக்ரகம் பெற்ற பிற்பாடுதான் ராஜ்ய விவகாரங்கள்.

திருவாங்கூர் சமஸ்தானம் இன்று மிகவும் உன்னத நிலைமையில் இருக்கின்றது. அதனுடைய விஸ்தீரணம் மைசூர் சமஸ்தானத்தில் மூன்றிலொரு பங்கு இருந்தாலுங்கூட, அதனுடைய ஜனத்தொகை மைசூரைக் கிட்டத்தட்ட போட்டி போடுகிறது. சமீபத்தில் எடுத்த கணக்கின்படி அதனுடைய ஜனத்தொகை சுமார் 51 லக்ஷமிருக்கும். அச் சமஸ்தானத்தின் கல்விப் பெருக்கைக் கவனிப்போமானால், மற்றெல்லா சமஸ்தானங்களைக் காட்டிலும் அங்கே படித்தவர்கள் அதிகமென்றே கூற வேண்டும்.

பண்டைகாலந் தொட்டு திருவாங்கூர் வியாபாரத்தில் சிறப்புற்று விளங்கி வருகிறது. நீண்ட கடற்கரை பெற்ற சமஸ்தானமாகையால் இயற்கைத் துறைமுகங்களும், செயற்கைத் துறைமுகங்களும் பல மலிந்து கிடக்கின்றன. இதனால் அதற்கு வெளி நாடுகளுடன் வியாபாரஞ் செய்யப் பல சௌகரியங்கள் இருக்கின்றன. வருஷா வருஷம் திருவாங்கூர் 250 லக்ஷம் ரூபாய் பெறுமான சாமான்கள் ஏற்றுமதி செய்தும், 132 லக்ஷம் ரூபாய் பெறுமான சாமான்கள் இறக்குமதி செய்தும் வருகின்றது, திருவாங்கூர் கைத்தொழில் சமஸ்தானமாயிருந்தாலும், விவசாயமும் அங்கு நல்ல கவனிப்புப் பெற்று வருகிறது. மீன் வியாபாரம், முந்திரிப்பருப்பு உண்டாக்குதல், கயிறு உற்பத்தி, அரிசி குத்தல் முதலியன முக்கியமான தொழில்கள். தொழில் செய்வோர்களின் தொகைகளில் 100க்கு 93 வீதம் குடிசைத் தொழிலையும், மிகுதியுள்ள 7 விகிதம் தொழிற்சாலையில் வேலையும் செய்து வருகிறார்கள்.

சின்னாட்களுக்கு முன்பு சென்னையில் ஜனங்களின் நிதியைக் கொண்டு செய்த திருவாங்கூர் மஹாராஜவின் சிலையொன்றைச் சென்னை கவர்னர் திறந்து வைத்தார். வயதில் சிறியோராயினும் செய்கையில் பெரியோராகிவிட்டார். காந்தியின் கனவான ஆலயப் பிரவேசத்தை நனவாக்கிவிட்ட மஹான். ஒருசமயம் ராஜாஜிகூட அவரைக் கலியுக ராமானுஜர் என்று புகழ்ந்திருக்கிறார். இவருடைய ராமராஜ்யத்தில், கடவுள் கண்முன்பாக மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லையென்னும் சித்தாந்தத்தை நிலை நாட்டினார். நேற்றுவரையிலும் குருடா யிருந்தவர்கள் இன்று கண் பெற்றவர்கள் போலக் களிக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர்களுக்கு அகக் கண்ணைக் கொடுத்த பாக்கியத்தில் மஹாராஜாவின் தாசரெனப் பட்டம் வகிக்கும் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும் கொஞ்சம் பங்கெடுத்துக் கொண்டார். திருவாங்கூர் ராஜ்யத்தை ஓர் பரிசீலனைச் சாலையென எடுத்துக் கொண்டால் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரை அதற்குத் தலைவரெனச் சொல்வது மிகையாகாது. திவான் ராஜரீகஞ் செய்வதில் தேர்ச்சி பெற்றவர். அவர் தன் வாழ்நாளைக் குடிகளுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டார். குடிகள், மஹாராஜாவையும், திவானையும் நீடூழி வாழும்படி, வாழ்த்தக் கடமைப்பட் டிருக்கிறார்கள்.

# தொழிற்சாலையும் குடிசைத் தொழிலும்

மேல் நாடுகளில் பெரிய பெரிய இயந்திரங்களினால் நடத்தப்பட்டு வரும் கைத்தொழில்கள் பழங்காலந்தொட்டு ஏழைகளின் உயிரெனச் சொல்லப்பட்டு வந்த குடிசைத் தொழில்களை நாசஞ் செய்து வந்தன. இயந்திரத் தொழில்கள் தலைகாட்ட ஆரம்பித்தவுடன் கிராமங்களில் வசிக்கும் ஏழைகளின் பாடு திண்டாட்டமாய் விட்டது. அவர்களிடத்தில் பஞ்சம் குடிகொள்ள ஆரம்பித்தது. அன்று ஆரம்பித்த வேலையில்லாத் திண்டாட்டத்தை இன்று வரையிலும் எவராலும் ஒழிக்க முடியவில்லை. ஆனால், மைசூரிலோ, பெரிய தொழிற்சாலைகளும், சிறிய குடிசைத் தொழிற்சாலைகளும் ஒன்றுக்கொன்று அன்னியோன்னியமாக நடந்துகொண்டு வருகின்றன. வானளாவி நிற்கும் புகைக் கூண்டு, கருமான் உலைக்களத்தை வியப்புடன் நோக்குகிறது. அலறிப் புடைத்துக்கொண்டு மில்லி விருந்து வரும் மெல்லிய வஸ்திரம், அமைதியுடன் தறியிலிருந்து வரும் கதருக்கு மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கொள்கிறது.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான குடிகளின் ஜீவநாடிகளான பல குடிசைத்தொழில்களைப் பாதுகாப்பதில் மைசூர் அரசாங்கத்தார் அதிகக் கவனஞ் செலுத்தி வருகின்றார்கள். குடிசைத் தொழிலும், இயந்திரத் தொழிலும் சகோதர பாவத்துடன் ஒன்று சேர்ந்து முன்னேற்ற மடையலாம் என்ற உண்மையை முன்னரே அரசாங்கத்தார் அறிந்திருக்கிறார்கள். இந் நோக்கத்தை மனத்தில் கொண்டே விவசாயத்துடன் பல குடிசைத் தொழில்களை அதிகாரிகள் மேல்பார்வையில் அரசாங்கத்தார் நடத்தி வருகிறார்கள். குடிசைத் தொழில்களான கைத்தறி நெசவு, எளிய இரும்பு சாமான்கள் செய்தல், தோல் பதப்படுத்தல், காகித உற்பத்தி, பாய்த் தொழில்கள், பொம்மைகள் செய்தல் முதலியவைகளுக்கு அரசாங்கத்தார் விசேஷ ஆதரவுகள் கொடுக்கிறார்கள். மைசூர் அரசாங்கத்தாரின் சக்தி நிறைந்த பாலில், அநேக குடிசைத் தொழில் குழந்தைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வலிமையும், வனப்பும் பெற்று வளர்ந்து வருகின்றன.

சமீபத்தில் அரசாங்கம் மேற்கூறிய கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு மற்றொரு படி உயரச் சென்றிருக்கிறது. ஒன்றரை லட்சம் பொருட் செலவில் மூன்று வருஷத் திட்ட மொன்றை வகுத்திருக்கிறது. இவ் வருஷமே அதாவது 1939-40ல் வேலையை ஆரம்பித்து, அதற்காக 50,000 ரூபாய் செலவு செய்து, கைத்தொழில்கள் விருத்தியாகும் முறைகளைக் கண்டு பிடித்துத் தெரிவிப்பதற்காகப் பல பெரிய பரிசோதனைச் சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள், கிராமக் குடிகளும் இதில் அதிக ஊக்கங் காட்டி வருகிறார்கள்.

---

# மைசூரின் சீர்திருத்தம்

உலகமும், உலகத்திலுள்ள நாடுகளும் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருங்காலத்தில், ஒவ்வொரு நாடுகளும் குடிகளின் க்ஷேமத்தையும், சௌகரியத்தையும் உத்தேசித்துப் புதிய புதிய சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதை நாம் பார்க்கிறோம். மைசூர் சமஸ்தானம் இந்தியாவிலுள்ள எல்லா சமஸ்தானங்களைக் காட்டிலும், எல்லா விஷயங்களிலும் அதிக முன்னேற்ற மடைந்திருப்பதையும் பார்க்கிறோம். இதுவரையிலும் விவசாயம், வியாபாரம், கைத் தொழில் முதலியவைகளில் பிரிட்டிஷ் இந்தியாவையே தோற்கடித்துக் கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுதோ அரசாங்க சீர்திருத்தங்கள் செய்வதிலும் இச் சமஸ்தானம் பின்வாங்குகிறதில்லை யென்பதைச் செய்து காட்டுகிறது

குடிகளின் அரசாங்கப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டுவந்த மைசூர் மஹாராஜா, சென்ற வருஷம் ஓர் சீர்திருத்தக் கமிட்டியை நியமித்து, குடிகளுக்கு வேண்டியதைப் பார்த்துப் பரிசோதனை செய்யச் சொன்னதன் பேரில், அக் கமிட்டி ஓர் அறிக்கையை வெளியிட்டது. அவ் வறிக்கையை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு கீழ்க்

கண்ட சீர் திருத்தத்தை மஹாராஜா பிரஜைகளுக்குச் சமர்ப்பித்தார். அதாவது :—

1. இரண்டாவது சபை, அசெம்பிளி இவ்விரண்டின் வேலைகளையும் அதிகாரங்களையும் அதிகப் படுத்தல்.

2. மேற் சொன்ன இரு சபைகளிலும் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களை அதிகப் படுத்தல்.

3. இனிமேல் இரண்டாவது சபைக்குத் திவான் சபைத்தலைவரல்லர். சபைத்தலைவரையும் உபத் தலைவரையும் சபையே தேர்ந்தெடுத்தல்.

4. நான்கு மந்திரிகளடங்கிய நிர்வாகக் கௌன்ஸிலுக்கு உத்தியோகப் பற்றில்லாத இரு மந்திரிகள் நியமனம்.

5. பொது வேலைகளுக்கு நபர்களைப் பொறுக்கி யெடுக்கவும், சர்க்காருக்கு உதவி செய்யவும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமனம்.

இச் சீர் திருத்தத்தினல் குடிகளுக்கும் முக்கியமாகக் கிராமத்தார்களுக்கும் அதிகச் செல்வாக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஸ்திரீகளின் யோக்யதாம்சமும், கிராம வோட்டர்களின் சொத்து யோக்ய தாம்சமும் குறைக்கப்பட்டிருக்கிறது. நகர வோட்டர்களின் வரி முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு வோட்டுரிமை கொடுக்கப்படும்.

நிர்வாகக் கௌன்ஸில் அல்லது மந்திரி சபையானது நான்கு மந்திரிகளும் திவானும் அடங்கிய சபை. அதற்குத் திவானே தலைவர். அந்நான்கு மந்திரிகளுக்குள் இருவர்குடிகளால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள், இருவர் மஹாராஜாவால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் அசெம்பளி அல்லது இரண்டாவது சபைஅங்கத்தினர்களாக இருக்கலாம். அசெம்பளி, இரண்டாவது சபை முதலிய இரண்டின் அமைப்பையும் கீழே காண்க :—

## அசெம்பிளி அமைப்பு

கிராமத் தொகுதிகள் 166, நகரத் தொகுதிகள் 45, முஸ்லிம்கள் 30, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 30, இந்தியக் கிறிஸ்தவர் 5 ஐரோப்பியர் 1, ஆங்கிலோ இந்தியர் 1, விசேஷஉரிமைத் தொகுதிகள் 27, நியமிக்கப்படுபவர்கள் 10.

## இரண்டாவது சபை

பொதுத் தொகுதிகள் :-பங்களூர், மைசூர், கோலார், தும்கூர் முதலிய ஜில்லாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் மூன்றுவீதம் மொத்தம் 12 ஸ்தானங்கள். ஹாஸான், ஷிமோகா, சித்தல் துர்க், கடூர், மண்டியா ஜில்லாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 2 வீதம் 10 ஸ்தானங்கள்,

பங்களூர், மைசூர் நகரங்களுக்கு 2.

வகுப்புத் தொகுதிகள் :—முஸ்லிம்கள் 5, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 4, இந்திய கிறிஸ்தவர் 1, ஐரோப்பியர் 1.

விசேஷ உரிமைத் தொகுதிகள் :—சர்வ கலாசாலை 1, வர்த்தகம் 1, சுரங்கம் 1, தோட்டத் தொழில் இந்தியர் 1, வெள்ளையர் 1, தொழிலாளர் 2, பெண்கள் 2, மற்ற நியமன அங்கத்தினர்கள் 24 ஆகமொத்தம் 68.

மேற் சொன்ன இரு சபைகளின் ஆயுட்காலம் மூன்று வருஷங்களிலிருந்து நான்கு வருஷங்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது,

மஹாராஜா கொடுத்த இச் சீர்திருத்தத்தைப் பிரஜைகள் விரும்புவார்களென நம்புகிறோம். 1923ம் வருஷ சீர்திருத்தப் பிரகடனத்தில் கண்டபடி, அரசாங்கத்தில் பிரஜைகள் மேன் மேலும் கலந்துகொள்ள வேண்டுமென்னும் தனக்குள்ள விருப்பத்தை மஹாராஜா ஊர்ஜிதம் செய்திருக்கிறார். இதே கொள்கை எதிர்காலத்திலும் பின்பற்றப் படுமென்பதில் சந்தேகமில்லை. ஆதலால் மஹாராஜா கூறுகிறபடி "கடவுளின் அனுக்கிரகத்தினலும், அவன் காட்டிய வழியே சென்றதினலும் கிடைத்த திட்டங்களைப் பிரஜைகள் பரஸ்பர நல்லுணர்ச்சியுடனும், பொறுப்புணர்ச்சியுடனும்" ஏற்றுக்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை.

# நமது சங்கீதத்திற்கு ஓர் மறுப்பு

[ஸி. சுப்ரமண்ய ஐயர் பி. ஏ.]

பாரதமணியில் "நமது சங்கீதம்" என்ற தலையங்கத்தின் கீழ் ஸ்ரீ கல்யாண சுந்தரம் தொடர்ச்சியாக எழுதி வருவதில் உள்ள சில அபிப்ராயங்களை மறுத்து எழுதுவது அவச்யமானதால், கட்டுரைகள் முடியு முன்னமே எழுத நேரிட்டது.

ஸாமகானத்தை நாம் இழந்து விட்டோம். அதை நமது சங்கீதத்தில் இன்னும் ப்ரதானமாக்கவேண்டும் என்ற வேண்டுதலுடன் அவர் முதல் கட்டுரையை முடித்திருக்கிறார். கர்நாடக ரீதிகௌளை ராகத்தில் ஸாம வேதம் பரிணமித்து உருவாக்கப்பட்டிருக்கிறதென்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்துகிறேன். துணியில் சுற்றப்பட்டிருக்கும் ஐந்துநாள் சிசுவிற்கு சிற்பக் கலையில் ப்ரதானம் கொடுக்கவேண்டும் என்பதற்குச் சமானமாக இருக்கிறது அவர் வேண்டுகோள்.

இரண்டாவது கட்டுரையில் "சங்கீத சாஸ்திரிகள்" என்று அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார். இவ் வசை மொழி எவர்களைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறதென்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ராக சஞ்சாரங்களை ஸ்வரங்கள் மூலம் நிர்ணயிப்பதற்காகக்கூடும் சங்கீத மஹா நாடுகளை அவர் குறிப்பிடுவதாக இருந்தால், இந்தக் கூட்ட நடவடிக்கைகளில் சங்கீத வித்வான்களும் சங்கீத ஆசார்யர்களும் அதிகமாகக் கலந்து கொள்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியாது.

போலி நியாய வாதிபோல் (Sophist) பொது ஜனங்கள் மனதைக் கவருவதுதான் சங்கீதம், மற்றவை அல்ல என்று அவர் கூறுகிறார். இதே கொள்கையை முன் டால்ஸ்டாய் கூறினார். ஆனால்இதை அவருக்குப் பின் வந்த கலாபிமானிகளும் விமர்சகர்களும் அடிக்கடி ஏக மனதாகக் கண்டித்து மறுத்திருக்கிறார்கள். பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கும் 'அன்னா கரினினா, யுத்தமும் சமாதானமும்', என்ற டால்ஸ்டாயின் புஸ்தகங்களிலிருந்து டால்ஸ்டாயின் இலக்கியக் கலையை அறிந்தவர் வெகு சிலரே.

பொது ஜனங்கள் மனதைக் கவரக்கூடியதைக் காட்டிலும் உயர்ந்தது கலை. ஸ்வரங்களால் மாத்திரம் குறிப்பிடக்கூடியவைகளைக் காட்டிலும் மிக உயர்ந்தது தென்னிந்திய சங்கீதக் கலை. பாமர மக்களுக்கு ப்ரியத்தைக் கொடுக்கும் ஐரோப்பிய 'ஜாஸ்' சங்கீதம், உயர்தர (classical) சங்கீதத்திற்கு மிகக் கீழ்த் தரமானது என்பதற்கு க்ரீஸ்லரின் பிடில் சங்கீதமே உதாரணமாகும்.

"த்யாகராஜர் ஸ்கூல், தீக்ஷிதர் ஸ்கூல்' என பலவகைப் பிரிவுகளைக் குற்றம் கூறி ஸ்ரீ கல்யாணசுந்தரம் எழுதி யிருக்கிறார். தற்காலத்தில் இந்த பரம்பரை சங்கீதத்தைக் கைபாள்பவர்களிடமுள்ள குற்றம் குறைகளை நான் அறிவேன். இருந்தாலும் ஐரோப்பிய சித்திரக் கலையிலுங்கூட "ப்லெமிஷ், டச், இடாலியன்" என்ற பலவகைப் பிரிவுகள் இருக்கின்றன. இது போலவே இந்தியாவிலும் 'வங்காளி, பம்பாய்' முதலிய பலவகைச்சித்ர கலை மார்க்கங்கள் இருக்கின்றன. பலவித மார்க்கங்களும் முறைகளும் எந்தக் கலையிலாவது இருந்தால் அவை அந்தக் கலையின் பலவிதமான முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் குறிப்பிடுகின்றன.

ஸ்வரம் பாடுவதை நம்மிடமிருந்து காப்பியடித்து எல்லா ஸ்வரங்களையும் 'ஏக ச்ருதியில்' ஹிந்துஸ்தானி வித்வான்கள் பாடுவதை ஸ்ரீ கல்யாணசுந்தரம் குறிப்பிட்டதிலிருந்து ஹிந்துஸ்தானி வித்வான்களிடமுள்ள குற்றங்கள் அவருக்குத் தெரியாமலில்லை என்பது

நிச்சயமாகிறது. கர்நாடக சங்கீதத்துடன் ஹிந்துஸ்தான் சங்கீதத்தைக் கலக்கவேண்டும் என்று அவர் கூறும் போசனை கிரேக்கனின் முக பாவ சிலையில் மங்கோலியனின் கண்களை வரைவது போலாகும்.

தென்னிந்திய சங்கீதக் கலையின் நுட்பம் ஸமூஹத்தில் சிறந்தவர்களுக்கே அதிலும் முக்யமாக வீணையில் ச்ரமப்பட்டவர்களுக்கே இன்றியமையாதது எனக் கடைசியாகக் கூறுகிறேன்.

---

# சங்கீதத்தில் ஜாதிபேதம்

(ஏ. என். கல்யாண சுந்தரம்)

சில ஆண்டுகளாய் நம் தென்னிந்தியாவில், தமிழ்ச் சங்கீதம் தெலுங்குச் சங்கீதம் என்ற ஜாதிச் சண்டையைச் சிலர் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். பாடும் பாட்டுக்கள் தமிழில் இருந்தால்தான் ஸங்கீதத்தை அனுபவிக்க முடியும் என்பது அவர்கள் கொள்கை. இதற்குச் சரியான பதிலை திருச்சி ரேடியோ நிலையத்தார் அளித்துவிட்டார்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை (3–11-39) இரவு 8-30 முதல் 8-45 மணி வரை இசைத் தட்டுகள் மூலம் சங்கீதம் நடைபெற்றது. முதலில் செம்மங்குடி பாடிய "மனஸ ஸஞ்சர ரே" என்ற பாட்டும் பிறகு அதன் தமிழ் காப்பி "மானஸ பூஜித" என்ற பாட்டும், பிறகு குந்தல வராளி ராகப் பாட்டும், "பாரத புண்ய பூமி" என்ற அதன் தமிழ்க் காப்பியும் பாடப்பட்டு ஒத்திடப்பட்டன. அர்த்தம் புரியாத ஸம்ஸ்கிருதப் பாட்டுக்கள் தமிழ் பாட்டுக்களைத் தூக்கி அடித்துவிட்டன. கேட்பதற்கு இனிமையாகவும் மனத்திற்குக் குதூஹலத்தையும் கொடுத்தவை சமஸ்கிருதப் பாட்டுக்களே. இது போதாதென்பதுபோல் ஸைகால் பாடிய "பாலம ஆய" என்ற ஹிந்திப் பாட்டு அதன் காப்பி "தாய் வளர்காடு," பிறகு "க்ருஷ்ணா நீ பேகனே" என்ற கன்னடப் பாட்டு அதன் காப்பி "க்ருஷ்ணா நீ வேகமாய்" என்ற பாட்டுக்கள் பாடப்பட்டன. மிகவும் உருக்கத்துடன் ஸைகால் பாடிய பாட்டை இவ்விதம் தமிழில் சங்கீதக் கொலை செய்வதாக இருந்தால், நாமும் ஹிந்தி எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து "ஹிந்தி ஒலிக" என்று கூச்சல் இட வேண்டியதுதான் நம் கடமை.

எவ்வளவோ வருஷங்களாய்த் தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளில் சலிக்காமல் பாட்டுக்களைக் கேட்டுச் சங்கீதத்தை அனுபவித்த நாம், திடீரென்று தமிழில்தான் சங்கீதத்தை அனுபவிக்க முடியும் என்று இப்பொழுது கூறினால் நமக்கும் "ஹிந்தி ஒலிக" என்று கூச்சலிடுபவர்களுக்கும் வித்யாஸமே இல்லாமல் போய்விடும். இதை ஜனங்களுக்கு ஒரு புது முறையில் மிகுந்த வெற்றியுடன் எடுத்துக் காட்டின திருச்சி ரேடியோ நிலையத்தாருக்கு நாம் கடமைப்பட்டவர்களாகிறோம். ஆனால் ஆங்கிலத்தில் வ்யாக்யானம் செய்ததற்குப் பதிலாய்த் தமிழில் பேசியிருந்தால், அது எல்லோருக்கும் புரிந்திருக்கும். இதே முறையை இசைத் தட்டு ஸங்கீதத்தை விமர்சனம் செய்யும் விஷயத்தில் ஏன் அனுசரிக்கக்கூடாது? இதை திருச்சி நிலையத்தார் கவனிப்பார்களா?

---

# சினிமாப் பித்து

(எஸ். ஸோமாஸ் கந்தன்)

நாகராஜனுக்கு வயது இருபதுக்கு மேலில்லை. "ஸ்கூல் பைனல்"—பாஸ் செய்திருந்தான். பாஸ் செய்து ஐந்து வருஷங்களாகியும் வேலை கிடைக்கவில்லை. இது சகஜந்தானே? அவன் தகப்பனுர் காலமாய்விட்டார். இவனுக்குச் சொந்சம் சொத்தும் ஒரு வீடும் உண்டு.

சினிமாவுக்குப் போவதென்ருல் நாகராஜனுக்கு மிகவும் பிரியம். இது அவன் தாயாருக்குப் பிடிக்காது. இருந்தாலும் நாகராஜன் பள்ளிக்கூடத்திலிருந்து, அம்மாளுக்குத் தெரியாமல் ஒரு சினிமாகூட விடாமல் "பகற்காட்சி"க்குப் போய்விடுவான்.

நாகராஜனுக்கு வெகு நாட்களாக சினிமாப் படத்தில் நடிக்க வேண்டுமென்கிற ஆசை உண்டு. பள்ளிக்கூடத்தை விட்டதும் இந்தப் பித்து அதிகமாய்விட்டது. ஆனல் இவனுக்குப் பாடத் தெரியாது; பாட்டு போதாது என்று யாராவது சொல்லிவிட்டால் கோபம் மாத்திரம் மூக்குக்குமேல் வந்துவிடும்.

நாகராஜன் எந்த சினிமா பார்த்து விட்டு வந்தாலும், வீட்டுக்கு வந்ததும் தான் பார்த்த காட்சிகளையெல்லாம் ஒரு முறை நடித்துப் பார்ப்பான். தியாகராஜ பாகவதர் நடித்த படமாயிருந்தால் வந்து விடும் வீட்டுக்கு அனர்த்தம்! அவர் பாடிய பாடல்களை யெல்லாம், தெரிந்ததோ தெரியவில்லையோ அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டான். பாடியே தீர்த்து விடுவான்! பாடி முடிந்ததும் தானே பாகவதராகி விட்டதுபோல் நினைத்து மகிழ்வான்.

சினிமாவில் நடிப்பதற்குத்தான் இவனுக்குப் பிரியம். ஆனல் இவன் தாயாருக்காகப் பயந்துகொண்டு வேலை தேடினன். அதற்குத் தகுந்தாற்போல் எங்கும் வேலை கிடைக்கவில்லை.

நாகராஜனுக்குத் தெரியாத சினிமா கம்பெனியே கிடையாது. "இந்தப் படம் எந்த ஸ்டுடியோவில் எடுத்தது? யார் டைரக்ட் செய்தது?" என்று யாராவது கேட்டால் நாகராஜன் மளமளவென்று சொல்லிவிடுவான். கம்பெனி அட்ரஸ், டெலிபோன் நம்பர் முதலியவைகளெல்லாம் அவனுக்குத் தலைகீழ்ப் பாடம்! யாராவது தவருகச் சொல்லிவிட்டால் அவர்களுடன் சண்டைக்குப் போய்விடுவான்.

நாகராஜனுடைய அறை பார்ப்பதற்கு ரொம்ப அழகாயிருக்கும். சுவர் தெரியாதபடி சினிமா நக்ஷத்திரங்களின் படங்களை மாட்டி யிருப்பான். ஒரு வாரம் சினிமாவுக்குப் போகவில்லை யென்ருல் நாகராஜனுக்குத் தலைவலி வந்துவிடும்.

நூற்றுக்கணக்கான தினுசில் தன்னைப் படமெடுத்துத் தன் அறையில் அவைகளை மாட்டி யிருந்தான். ஒவ்வொரு சினிமாக் கம்பெனியிலும் நாகராஜன் படம் இருக்கும். நாகராஜன் பேட்டி காணுத நடிகரோ டைரக்டரோ கிடையாது!

நாகராஜனுக்கு ஒரு பாட்டி யிருந்தாள். அவளுக்கு நாகராஜனுடைய இந்த செய்கைகளெல்லாம் பிடிக்காது. "ஏண்டா, நாகராஜா, வயசு இருபதாறது! வேலைக்குப் போய் சம்பாரிக்கணும் என்கிற எண்ணமே உனக்குக் கிடையாது! சினிமாவுக்குப் போய்க் காசைத் தொலைக்கிறே! இப்படியிருந்தா குடும்பம் எப்படி நடக்கும்? பாட்டா ஒரு எழவா உனக்குத்தான் கிடையாதே! உன்னை யாரு சினிமாவில் சேர்த்துப்பா? நீ நேத்துப் பாடிண்டிருந்த யாக்கும்! பக்கத்தாத்துப் பிராமணர்—"நல்ல சகுனமாறதுடி! கழுதை கத்தறது!" என்று ஆம்படையா

ளிடம் சொல்லிண்டு பொண்ணுக்கு வரன் தேடப் புறப்பட்டார்! நீ ஆலாபனம் பண்ணற அழகு அப்படி யிருக்கு!"—என்று ஒருநாள் போடு போடென்று போட்டாள். நாகராஜன் பாட்டி சொல் வதைக் காதில் போட்டுக்கொள்ளவே மாட்டான்.

நாகராஜன் வீட்டில் சீதாராமன் என்றொருவன் குடியிருந்தான். அவன் இந்த வீட்டுக்குக் குடி வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. வீட்டில் அவனும் அவன் மனைவியும்தான். ஒரு நாள் சீதாராமன் மனைவியும், நாகராஜனுடைய தாயாரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இரவு மணி ஏழு.

நாகராஜன் சினிமா பார்த்துவிட்டு வந்தான். வீட்டுக்குள் நுழையும்போதே —"ராதே, உனக்குக் கோபம் ஆகாதடி!"—என்ற பாட்டை உச்சஸ்வரத்தில் பாடிக்கொண்டே நுழைந்தான். சீதாராமன் மனைவி இவனைக் கண்டதும் எழுந்திருந்தாள். ஆபீஸிலிருந்து வந்து கொண்டிருந்த சீதாராமன் இதைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான்! வந்துவிட்டது கோபம்!

திடுதிடுவென்று உள்ளே போய் நாகராஜனைப் பிடித்துக் கன்னத்தில் ஐந்தாறு அறை அறைந்துவிட்டான். எதிர் பாராத விதமாய் இச் சம்பவம் நேர்ந்து விட்டபடியால் நாகராஜனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. வாங்கின அறையின் வேகத்தினால் அவனுக்கு எல்லாம் சுழல்வதுபோல் தெரிந்தது.

"ஏண்டா திமிறு ஜாஸ்தியா யிருக்கோ உடம்பிலே? வீட்டுக்குள் நுழையும்போதே பாட்டென்னடா?"

நாகராஜனால் பேச முடியவில்லை, கண்ணும் வீங்கிப்போய்விட்டது — "இல்லே ஸார்! நான் உங்காத்து மாமியைக் குறித்துப் பாடவில்லை! "சிந்தாமணி" யில் பில்வமங்கள் பாடுகிறான்! அந்தப் பாட்டை நான் பாடிப் பார்த்தேன் சரியாய் வருகிறதா என்று! அது தெரியாமல் இப்படி அறைந்து விட்டீர்களே!—" என்று அழுகை கலந்த குரலில் சொன்னான் நாகராஜன்.

"நான் சினிமா பார்ப்பது கிடையாது. நீ சினிமா பாட்டு பாடினாய் என்று எனக்கெப்படித் தெரியும்? அவள் நிற்கிறாள்! அவளைப் பார்த்துப் பாடினாய் என்று நினைத்தேன். எப்படி இருந்தாலும் வீட்டில் இந்த மாதிரிப் பாட்டுக்களைப் பாடலாமா? "நீஎங்கு சென்றாலும் நான் உன்னை விடுவேனோ? ஓடாதே ராதே—உனக்குக் கோபமாகாதடி!......" என்று நீ பாடியதும் தான் எனக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. என் மனைவியின் பெயர் ராதை! நான் வெளியிலிருந்து உன் பாட்டைக் கேட்டதும் அப்படியே நின்றுவிட்டேன்! கடைசி அடியைச் சொன்னதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது!"

நாகராஜன் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கோவிலுக்குப் போயிருந்த அவன் பாட்டி அப்பொழுதுதான் வந்தாள், இந்தக் காட்சியைப் பார்த்தாள்

"நான் சொன்னாக் கேக்கறயாடா! ஆத்திலே நுழையும் போதே பாட்டு, கூத்து எல்லாம் நடக்கறது! சினிமாவுக்குப் போற காலே முறிச்சுப் பிடணும்! அப்போ எல்லாம் சரியாப் போயிடும்! அந்தப் பிராமணன் அடிச்சது எனக்கு ரொம்பத் திருப்தியாயிருக்கு! நான் சொன்னாப்படுமா மனசிலே? ஊரான் உதைச்சான்னாப் படும்! சினிமாக் கலேயோ — 'எச்சக் கலேயோ தெரியல்லே! அதுக்குப் பாடு படறானும்! பாடுபட்டத்துக்குப் பலன் கிடைச்சு தோல்வியோ! பேசாம இரு!" — என்று பாட்டி சரமாரியாகப் பொழிந்தாள். நெருப்புடன் காற்று கலந்தது போல், நாகராஜன் தாயாரும் பாட்டியுடன் சேர்ந்து கொண்டாள்.

"நான் சினிமாவில் நடித்து ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைக் கொண்டு வந்து கொட்டினால், நீங்கள் சாப்பிடுவீர்கள்

உட்கார்ந்துகொண்டு! நான் சினிமாவுக்கு எதற்காகப் போகிறேன்? நடிப்புக் கற்றுக் கொள்வதற்குத்தான்! எந்தப் பெரிய டிகனும் சினிமா பார்க்காமல் நடிப்புக் கற்றுக் கொள்ள முடியாது. நானும் சினிமாவில் நடித்துப் புகழ்பெற்று விட்டால் அப்பொழுது என்னைத் தலைமேல் வைத்துக்கொண்டு தாங்குவீர்கள்! சினிமாவில் நடித்துச் சம்பாதிப்பதைவிட எந்த உத்யோகத்திலும் சம்பாதிக்க முடியாது! நான் சினிமாவில் தான் நடிக்கப் போகிறேன்! சினிமாக் கலையில் உழைத்து, என் வாழ்க்கையில் ஒரு வெகு மதியை அந்த உழைப்பின் பயனாக அடையப் போகிறேன்!"—என்று இரைந்து கத்தி விட்டு முகத்தை மூன்றுபடி வெண்கலப் பானை மாதிரி வைத்துக்கொண்டு வெளியே போய் விட்டான் நாகராஜன்.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. "ஹெர்மன் ப்ரிக்ஸ்" நடித்த "டார்ஜானின் புதிய சாகசங்கள்"—என்ற இங்கிலீஷ் படம் அன்று ஆரம்பம். நாகராஜன் போகாமலிருப்பானா? படத்தைப் பார்த்ததும் நாகராஜன் மனதில், தானும் திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு சமூகப் படத்தில் நடித்துப் புகழ் பெற வேண்டும். என்கிற எண்ணம் தோன்றி வேரூன்றி விட்டது,

* * *

ஒருநாள் நாகராஜன் ரிக்ஷாவில் ஒரு நண்பனுடன் வந்தான். முழங்காலில் பலத்த கட்டு! உடைகளெல்லாம் இரத்தம்! ரிக்ஷா வீட்டு வாசலை யடைந்ததும் ரிக்ஷாக்காரனும், நண்பன் சீனுவுமாகச் சேர்ந்து நாகராஜனைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்து படுக்கவைத்தனர். இந்தக் காட்சியைக் கண்டதும் நாகராஜனுடைய தாயாரும் பாட்டியும் அழ ஆரம்பித்து விட்டனர்.

"அப்பா, நாகராஜா! எப்படிடா அடி பட்டது? என் கண்ணே! எங்காவது விழுந்து விட்டாயா?"—என்று பாட்டி அலறினாள்.

"வண்டி யேதாவது மேலே ஏறிவிட்டதா என்ன? எங்கேயடா அகப்பட்டுக் கொண்டாய்?"—என்று அழுதாள் அவன் தாயார்.

நாகராஜனால் பேச முடியவில்லை. துக்கம் அவன் மார்பைப் பிளந்தது! கண்ணீர் ஆறாய்ப் பெருகியது!

"அம்மா, அழாதே! பாட்டி, நீ சொன்னது இப்பொழுதுதான் தெரிகிறது! "சினிமாப் பேச்சு பேசாதே!"—என்று அடிக்கடி நீ சொல்வாய். சினிமாவில் கொண்ட பித்தினால்தான் என் கால் ஒடிந்தது! "சினிமா பார்த்தால்தானென்ன? எத்தனை பேர் பாக்கலே? அதையே இப்படிப் பித்துப் புடிச்சாப் பிலே நினைச்சுண்டிருப்பாளா?"—என்று நீ முந்தாநாள் சொன்னது இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது!

"முந்தாநாள்"—"டார்ஜானின் புதிய சாகசங்கள்"—என்ற இங்கிலீஷ் படம் பார்த்தேன். அந்தப் படத்தில் டார்ஜான் மரத்துக்கு மரம் தாவுகிறான்! மலையிலிருந்து தண்ணீரில் குதித்து நீந்துகிறான்!—இவைகளைப் பார்த்தவுடன் எனக்கும் அப்படியெல்லாம் செய்து பழகவேண்டும் என்று தோன்றியது!

"நேற்றைய தினம் கோடிவீட்டுச் சீனுவும் நானுமாக ஏரிக்குச் சென்று—அங்கிருந்த புளிய மரத்தில் கயிற்றைக் கட்டி—டார்ஜானைப்போல் தாண்டிப் பழகினோம்—நான் இரண்டுமுறை கஷ்டப்பட்டுத் தாண்டினேன். ஆனால் சரியாக வரவில்லை. அதனால் இன்று காலை அதே இடத்துக்குச் சென்று பழகினோம். சீனு தாண்டமாட்டேன் என்று சொல்லிவிட்டான். நான் தாண்டினேன். தாண்டும்பொழுது கைப்பிடி தவறி 30 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து விட்டேன். கால் முறிந்து விட்டது! எனக்குப் பிரக்ஞை தவறிவிட்டது! உடனே சீனுவும் இன்னொரு பையனுமாகச் சேர்ந்து என்னை வண்டியில் தூக்கி வைத்து டாக்டர் வீட்டுக்கு அழைத்

(218-ம் பக்கம் பார்க்க).

# பொய்யர் சங்கம்

(ஏ. என். கலியாணசுந்தரம் எம். ஏ.)

ஸத்யபுரியின் வீதிகளில் முக்யமான தொன்றில் பொய்யர் சங்கம் இருக்கிறது. இந்தியாவுக்குப் பூர்ண சுதந்திரம் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் இச்சங்கத்தின் அங்கத்தினராவது மிகக் கடினம். கடுமையான பரீக்ஷையில் தேறிய பிறகுதான் அங்கத்தினராக முடியும்.

சட்ட திட்டங்களோ மிகக் கடுமையானவை. இடைவிடாமல், தட்டுத் தடங்கலின்றிப் பொய் பேசவேண்டும். சிறிதாகிலும் தயக்கம் கூடாது. விவாதத்திற்கோ, மறுப்பிற்கோ இடமின்றிப் பொய் பேச வேண்டும். பொருந்தாமல் பொய் சொன்னால் இரக்கம் சிறிதுமின்றி 'கல்தா'க் கிடைக்கும்.

பொய் பேசுதலைப் பொழுதுபோக்காக வைத்துக்கொண்டிருப்பவர்களை உத்தேசித்து ஆரம்பித்த சங்கமாதலால், பொய் பேசுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் அங்கத்தினராக முடியாது. ஆகையால் பால்காரர்கள், ஓட்டல்காரர்கள், வக்கீல்கள், சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரிகள் முதலியவர்கள் இச் சங்கத்தின் அங்கத்தினராகலாம் என்று கனவிலும் நினைக்கவேண்டாம். சங்கத்தின் வருஷ சந்தா ரூபாய் 10 தான்.

இச்சங்கத்தில் உண்மையாயிருப்பது அதன் சட்ட திட்டங்கள்தான். தவறி அங்கத்தினர் யாராவது ஒரு நிஜம் பேசிவிட்டால், தவறாமல் அபராதம் ரூபாய் ஐந்து விதிக்கப்படும். மூன்று தரம் உண்மை பேசினால் அங்கத்தினர், சங்கத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

இவ்விதக் கடுஞ் சட்ட திட்டங்களை அறிந்த பின்னரும், அங்கத்தினராக வேண்டுமென்று ஆவலுடன் ஒருநாள் நான் சங்கத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு பட்டாணியன் தன் கத்தியைத் தீட்டியவண்ணம் உட்கார்ந்திருந்தான். உள்ளே நுழையவிருந்த என்னை அவன் தடுத்து 'நீங்கள் யார்' என்று கேட்டான். 'இச்சங்கத்தின் அங்கத்தினர்' என்று நான் பதிலளித்தேன். சேவகன் 'அப்படி இருக்காதே, தங்கள் பெயர் என்ன' என்று கேட்டதற்கு நான், 'என் பெயர் நாரதர்' என்று பதிலளித்தேன். உடனே சேவகன் ஒரு குதி குதித்து உள்ளே சென்று காரியதரிசி போல் தோன்றும் ஒருவருடன் திரும்பி வந்தான். காரியதரிசி என்னை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "கலஹம் செய்வதில் பிரியமான நாரதரா நீங்கள்" என்று என்னைக் கேட்டார். நான் பதில் சொல்வதற்குள், உள்ளிருந்த அங்கத்தினர்களில் நாலைந்து பேர்கள் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். காரியதரிசி என்னை அவர்களுக்கு 'நாரதர்' என்று அறிமுகப்படுத்தினர். அவர்கள் என்னை வெகு ஆவலுடன் உற்று நோக்கினார்கள்.

ஒருவர்:—ஸங்கீத சாஸ்திர நிபுணர், கலஹப்பிரியர், நாரதரா நீங்கள்?

நான்:—இல்லை. நான்காஞ்சீபுரம் இட்டலியையும், மூட்டைப்பூச்சி விநாசினியையும் கண்டுபிடித்து, ஹிந்தியை எதிர்த்து ஆர்ய தர்மத்தை ஸ்தாபித்தவன்.

ஒருவர்:—"ஆமாம். ஆமாம். ரொம்ப சரி" என்று கூறித் தயக்கத்துடன் விழித்தார்.

காரியதரிசி:—உங்களுக்குத் தாய்தந்தையர் இருக்கிறார்களோ?

நான்:—இல்லை. அந்யாயமாய், என் தாய் இறப்பதற்கு ஆறு மாதம் முன்னர், தம் இளம்வயதிலேயே என் தகப்பனார் காலஞ்சென்றார். என்

தாயாரோ நான் பிறப்பதற்கு ஆறு மாதம் முந்தியே இறந்து என்னைப் பரிதவிக்கவிட்டுச் சென்றாள்.

இதைக் கேட்ட அங்கத்தினர்கள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழுந்தது. அவர்கள் முகத்தில் சந்தோஷமும், உத்ஸாஹமும், பிரகாசித்தன.

காரியதரிசி:—ஏதாவது சொத்து வைத்துவிட்டுப் போனார்களோ?

நான்:—அதிகமாய் ஒன்றுமில்லை. ஸஹாரா பாலைவனம், போலண்டு, அபிஸீனியாச் சிங்கம் ஒன்று, உடைந்த நாற்காலி மூன்று, துடைப்பம் ஒன்று. இவைகள்தான் கிடைத்தன.

இதற்குள் அநேக அங்கத்தினர்கள் உள்ளிருந்து வந்து எங்களைச் சூழ்ந்து கொண்டு ஆவலுடன் நான் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

அங்கத்தினர்:—தங்களுக்குக் குழந்தை ஏதாவது........

நான்:—அவ்வளவு அதிகம் ஒன்றுமில்லை. ஹிட்லர் மகளைக் கல்யாணம் செய்து கொண்டு, 'சிவஸ்வாமி அய்யர்' கர்ப்பத்தடை முறையை அனுசரித்ததில், பதின்மூன்று குழந்தைகள்தான் பிறந்தன. இதற்காக என் மனைவி கோபிக்கவே, 'ராமேசம்' முறையைக் கைப்பிடித்ததில் பதினேழு குழந்தைகள் பிறந்தன. இப்பொழுது சென்ற 6 வருஷமாக 'மேரி ஸ்டோப்ஸ்' முறையைக் கையாண்டதில், 6 குழந்தைகள் பிறந்திருக்கின்றன.

காரியதரிசி:—அது போனால் போகிறது. இந்த ஜெர்மன் யுத்தத்தைப்பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன,

நான்:—ஹிட்லர் ஆரம்பித்திருக்கும் இந்த யுத்தம் மிகுந்த தர்ம யுத்தம். ராம ராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபித்து, ஜன நாயகத்தை வெற்றிபெறச் செய்யவே இந்த யுத்தம் நடக்கிறது.

இதைக் கேட்ட அங்கத்தினர்கள் குதூகலத்துடன் கரகோஷம் செய்தார்கள். ஒரு கிழ அங்கத்தினர் அவர்களைத் தள்ளிக்கொண்டு முன்வந்தார்.

கிழ:—இன்னும் ஒரு கேள்வி. மிஸ் மேயோவைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

நான்:—மிஸ். மேயோ ஒரு பெரிய ஸத்யவாதி. ஹரிச்சந்திரனின் அருந்தவப் புதல்வி. அவள் பேசும் வார்த்தைகளில் நூற்றுக்கு நூற்றைம்பது பங்கு உண்மை இருக்கிறது. இந்தியாவின் நன்மைக்காகப் பாடுபடும் உண்மை ஸத்யாக்ரஹி. இந்திய ஸர்க்காரும், ஸ்வதேச மன்னரும் அவளை எதிர்த்தபோதும், அவள் அதை எல்லாம் பொருட்படுத்தாமல், சுயநலம் சிறிதுமின்றி, இந்தியாவின் மேன்மைக்காகப் பாடுபட்டு, இந்தியர்களால் புகழப்பட்டு, கீர்த்தி அடைந்தவள்.

இதைக் கேட்டதும் அங்கத்தினர் அனைவரும் திக்ப்ரமை அடைந்து, இடி விழுந்தவர்கள்போல், என்னை நோக்கினார்கள். கிழவருக்கு முதலில் மயக்கம் தெளிந்தது.

கிழ:—என்னை உங்களுக்கு அடையாளந் தெரியவில்லையா? ராஜகோபாலாச்சாரியார் ஹிந்தியை எதிர்த்து, ஈரோட்டில் பேசிய பொழுது நான் அக்ராசனம் வகிக்க வில்லையா? நீங்களும் அன்று ஹிந்தியை எதிர்த்துப் பேசவில்லையா?

நான்:—அது நான் இல்லை. என் சாக்ஷாத் தம்பி.

இதைக் கேட்டதும் கிழவருக்கு ஆனந்தம் அளவு மீறி என்னைக் கட்டி அணைத்து "கண்டேன் அநேக ஆண்டுகளாய்க் காணாமல்சென்ற என் காதலியை" என்று கூறி என்னை முத்தமிட்டார். அங்கத்தினர் அனைவரும் என்னை அவர்கள் தலைமேல் தூக்கிக்கொண்டு, கிழவர் என்னைக் கட்டிக்கொண்டு தொங்குவதையும் சட்டை செய்யாது, உள்ளே சென்றார்கள். பரீக்ஷையில் தேறிவிட்டதால் நான் அங்கத்தினராகலாம் என்றார் காரியதரிசி. சந்தாக் கொடுப்பதற்காகப் பையில் கையைப் போட்ட என்னை அங்கத்தினர்கள் தடுத்து, அவர்களுக்குள்ளேயே பணம் வசூலித்து என் சந்தாவைச் செலுத்தி, என்னை மரியாதை செய்தார்கள்.

# எச்சுப் பாட்டி

("வல்லிக் கண்ணன்")

கிராமங்களில் வேடிக்கை விநோதங்கள் கிடையா என்று குறை கூறுபவர்கள் அநேகர். அவர்கள் நன்றாக யோசித்துப் பாராமலே பேசிவிடுகிறார்கள். வேடிக்கைகள் இல்லாவிடினும், நாம் எவ்வளவோ உண்டாக்கிக் கொள்ளலாம். சீட்டுக் கச்சேரிகளும், வம்பர் மகாசபைகளும், திருவிழா ஆட்ட பாட்டங்களும் உண்டாக்கும் கிராமவாசிகளுக்கு மற்ற வேடிக்கைகள் ஏற்படுத்துவது கஷ்டமல்ல.

விநோதங்கள் கிராமங்களில் ஏராளமாகச் செறிந்து கிடக்கின்றன. நாம் பழகுபவர்களிடையே எவ்வளவோ விநோதப் பேர்வழிகளிருக்கிறார்கள். அவர்களை நாம் ஆராய்ந்து கவனித்தால் வேடிக்கையும் விநோதமும் ஒருங்கே கிடைக்கும்.

இவ்வாறான விநோதமான கிராமப் பேர்வழிகளில் எச்சுப்பாட்டியே அக்கிராசன பீடத்திற்கு லாயக்கானவள். எந்த வம்பர் மகாசபை அல்லது அப்பளக் கச்சேரி இருக்கட்டும், அங்கு எச்சுப் பாட்டியோ அல்லது அவளது வகுப்பினர் ஒருவரோ இல்லாமலிரார். 'எதிராத்து எச்சுப்பாட்டி' நுழையாத கதைகளும், நாவல்களும் சொற்பந்தான்.

இந்த எச்சுப்பாட்டி பழங்காலத்தின் பிரதிநிதி. கர்நாடகக் கொள்கை தென்பட வேண்டிய இடங்களில் நம் எச்சுப் பாட்டி தோன்றுவாள்; சக்கைபோடு போடுவாள்; வெளுத்து வாங்குவாள். இவளது நடை, உடைபாவனையே அலாதி. பேச்சோ தனி ரகம். ஒவ்வொரு வார்த்தையிலும் நாகரிகத்திற்கும், தற்கால உலகிற்கும் 'சுரீர்' சவுக்கடி கொடுப்பவள் எச்சுப்பாட்டிதான்.

இதனால் எச்சுப்பாட்டி சில சமயங்களில் தர்மசங்கடமான நிலையில் சிக்கிக் கொள்வாள். "கத்தரிக்காய் தலைகீழாகக் காய்க்கிறதாமே!" என்று யாராவது சொல்வார்கள். "உம்; காய்க்கத்தானே செய்யும். பின்னே என் காய்க்காது? கலிதான் முத்தி வருதே! உலகமே கெட்டுப் போயிடுத்து. எல்லாம்—நண்டும் சுண்டும்—நாகரிகம் நாகரிகம்ன்னு சொல்லிண்டு உலகத்தையே குட்டிச்சுவர் பண்றதுகளே! அதுதான் காலா காலத்திலே மழை பெய்யாமல் போறது!" இப்படிச் சொல்லி முழங்காலிற்கும், மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவாள். இதே ரீதிதான் பாட்டியின் ஒவ்வொரு பேச்சும். உடனே பக்கத்திலுள்ளவர்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள்.

கோவில், குளம் எங்கானாலும் ஒரு கொட்டுச் சத்தங்கேட்டால் அங்கு முதலில் நிற்பது எச்சுப் பாட்டிதான். கலியாண வீட்டில் 'மணிப்பர்ஸ்' போன்ற தன் வாயை அகலத்திறந்து மகிழ்வுடன் முதன் முதலில் ஆஜராய் விடுவாள். அவ்வூரில் ஒரு இழவு விழுந்தால் அங்கும் அவள் தான் முதல். அவ்வீட்டு வாசற்படியில் கால் வைத்தவுடன் அவளது இரண்டு கண்களிலுமுள்ள அருவிதெறித்து விழ ஆரம்பிக்கும். அங்கு அழுகை கொஞ்சங் குறைந்தால் நம் பாட்டி, பழைய விஷயங்களைக் கிண்டிக் கிளறி ஞாபகத்திற்குக் கொண்டு வந்து அழுகையை அதிகமாக்குவாள்.

பாட்டியின் தினசரிக் காரியங்கள் ஒழுங்காக நடைபெறும். காலையில் ஐந்தரை மணிக்கே எழுந்து ஆற்றங்கரைக்குக் கிளம்புவாள். வழியில் தன் கண்களில் தென்படும் அரளிச் செடிகளை மொட்டை யடிப்பது அவளது முக்கியமான கடமையாகும். நதியில் ஸ்நானம் முடிந்ததும் கரையில் அரைமணி நேரம் இருந்து, தான் சேகரித்த பூக்களை ஒன்

றென்றாப் ஆற்றில் விட்டுத் தனது நித்தியானுஷ்டானங்களை முடிப்பாள்.

காலையிலும் மாலையிலும் கோவிலுக்குப் போகத் தவறமாட்டாள் பாட்டி. வம்பளக்கும் இடங்களில் காட்சியளிப்பது போலவே, புராணப் பிரசங்கங்களிலும், கதாகாலட்சேபங்களிலும் பாட்டி முதலிலேயே வந்து விடுவாள். அங்கு விநியோகிக்கும் சுண்டற் கடலையை வாங்கின பின்தான் வீடு திரும்புவாள்.

பாட்டி அமாவாசை, ஏகாதசி முதலிய தினங்களில் பட்டினி விரதம் அனுஷ்டிப்பதுண்டு. அன்று ஒவ்வொரு வேளையும் நாலு தோசையும், கால்படி காப்பியுந்தான் சாப்பிடுவாள். மற்ற 'நொறுங்கலுங் கிறுங்கலும்' இருக்கவே இருக்கின்றன. ஆனால் 'ஏகாதசி விரதம் வாய் மூடாப் பட்டனி' என்று சொல்லி விட்டு அவள் முன்னின்று தப்ப முடியாது. அவ்வளவு கோபம் பொத்துக் கொண்டு வரும். மாதத்தில் இந்த இரண்டு விரதங்கள் போக 'ஸ்பெஷல் ஐடம்ஸ்' வேறு உண்டு. ஆகவே மாதம் முழுதும் புண்ணியந் தேடுகிறவள் நம் எச்சுப் பாட்டி.

இந்நாளையப் பாட்டிகளிடம் 'சினிமா, நாடகம் முதலியவற்றைப் பற்றிப் பேசினால் 'ஐயோ, உலகம் கெட்டுப்போயிடுத்து!' எனக் குமுறுவார்கள். ஒரு நாள் எச்சுப் பாட்டி சினிமாப் படம் ஒன்றை விமர்சனஞ் செய்து கொண்டிருந்தாள். நான் போய் 'பாட்டி, நீதான் சினிமாப் பார்க்கிறதில்லையே! இது உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டுவிட்டேன்.

அவ்வளவுதான்! என் பாடு அதோ கதியாய் விட்டது. 'பாட்டிகள் தனித் தமிழ் வசை மொழி யகராதி'யிலிருந்து வார்த்தைகள் என்மேல் பிரயோக்கிகப் பட்டன. பாட்டிகளுக்கென்றே பிரத்தியேகமான வசை மொழிகள் ஒவ்வொரு பாட்டிக்கும் நெட்டுருப் பாடந்தான்.

எச்சுப் பாட்டி தெருவில் நடந்துவரும் பொழுது யாவரும் எட்டி விலகியே செல்லவேண்டும். இல்லாவிடில், வசை மொழிகளும் முணுமுணுப்பும் அதிகமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் பழங்கால நாகரிகத்தின் புதிய பிரதிநிதியாகப் பிரகாசிக்கின்றாள் இந்த எச்சுப் பாட்டி!

---

(214-ம் பக்கத் தொடர்ச்சி)

துச் சென்றனராம்! டாக்டர் வீட்டுக்குப் போனபிறகுதான் ப்ரக்ஞை உண்டாயிற்று! டாக்டர்—காலையே எடுத்து விடவேண்டு மென்கிறார்! எலும்பு முறிந்து விட்டதாம்!"—என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே துக்கம் அவன் நெஞ்சை யடைத்தது! கண்களிலிருந்து நீர் அருவிபோல் மளமளவென்று பெருகி இரண்டு கன்னங்களையும் நனைத்தன.

*  *  *

நாகராஜன் பொய்க்கால் வைத்துக் கொண்டு கக்ஷ தண்டத்தின் உதவியால் நடக்கிறான். இவன் அங்கஹீனனாய்விட்டபடியால் எங்கும் வேலை கிடைக்கவில்லை. என்ன செய்வான்! பாவம்! கொஞ்சம் முதல் வைத்து ஒரு வெற்றிலைப்பாக்குக் கடை வைத்தான். அதில் வரும் ஊதியத்தைக் கொண்டுதான். நாகராஜன் இப்பொழுது ஜீவனம் செய்கிறான்! அவன் வாழ்க்கை இப்பொழுது முற்றிலும் மாறுதலடைந்துவிட்டது! தன் அறையிலிருந்த சினிமா நக்ஷத்திரங்களின் படங்களையெல்லாம் எடுத்து விட்டான்! அந்த அறைதான் இப்பொழுது வெற்றிலை பாக்குக் கடையாக மாற்றப் பட்டது! நாகராஜனுக்கு இப்பொழுது சினிமாப் பித்து போய்விட்டது என்பதைச் சொல்லவேண்டுமா?

---




(ராவ் சாகிப். கே. சுப்ரமண்யம்)

விவசாயத் தொழிலே விருத்தி பண்றது. மாடுகள் விருத்தி. இது நம்க்கு நன்னாத் தெரிஞ்சிருக்கு (மிக்க கேவல நிலைமையிலிருக்கு என்று) விருத்திபண்ண. விவசாய டிபார்ட்மென்ட் காரர்கள் ரொம்ப உபகாரம் செய்வார்கள். கூடுமான வரையில் அவாள் சொல்படி நாம் விளைவை விருத்தி பண்ண வேண்டியது. பசுவிருத்தி மிக்க அவசியம். நம்ம ஊரிலேயிருக்கிற உழவு மாடுகள் பசுக்களைப் பார்த்தா சிரிப்பு வர்ரதுடா. எல்லாவற்றையும் பிடிச்சு நவராத்திரி கொலுவிலே வைக்கலாம்போலே யிருக்கு. அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் காக்ஷிச் சாலைகளிலிருக்காமே (Exibition museums) அங்கே இந்த மாடுகளை அனுப்பிவித்தால் நம்ம கிராமங்களுக்குத்தான் இனும் (Prize for dwarf cattle) அடிச்சுப்பிடலாம். இந்த மாடுகளை வைத்துக்கொண்டு என்ன உழவு. அந்த கலப்பையோ ஒரு ஆணியை வைத்துக்கொண்டு கீறினல் போலே கீறுகிறது. என்ன ஆழம் என்ன சேறு. எவ்வளவு புழுதி? அடாடா மோசம்டா. இப்படி செய்தா அதற்குத் தகுந்த விளைவு தான். பசுவோ அடபாவமே, எலும்பும் தோலும். என்ன பால் கொடுக்கப் போறது நம்ம குழந்தைகளுக்கு. மேய்ச்சலுக்கு இடமிருக்கா நம்ம ஊர்களிலே? 6 மாசம் வீட்டோடே கொல்லையிலே கட்டவேண்டியது தானே (வெளியிலேதான் பயிர்கள் வயலாச்சே) இவ்வளவு கேவலமாயிருக்கிற பசு, சட்டுப் பிட்டுன்னு குளிர்லே, மழையிலே பிராணனை விட்டுவிடறதுகள். நாளா வட்டத்திலே இந்த கதிக்கு வந்தூடுத்து. இனிமேல் சீர்த்திருத்த வேண்டாமா? நாம் ஆரம்பிப்போமே. பின்னாலே வருகிறவாள் பார்த்துக்கிறாள். அதுகளுக்கு வியாதி, வெக்கை வந்தால் நமக்கு ஒண்ணும் தெரியறதில்லே. எதுக்கு எடுத்தாலும் ஊர் இடையன். முளகாயையும் கொள்ளு ஜலமும் அல்லது பெருங்காயமும் பொண்டையுமா கொடுக்கிறான்.

இப்போ இடையன்கள் சாராயம், கோழி முட்டை வைத்தியம்கூட ஆரம்பிச்சுட்டான்கள். இதன் பலம் எங்கேயோ. இதுகளுக்கெல்லாம் தப்பிப் பிழைச்சால் மாடு நம்முது தான் கடைசியில். அதுக்கும் ஆயிசு கெட்டியா யிருக்கணும். ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் தெரிஞ்சுக்கணும். கோவிருத்தி ஆனால் தான் எல்லார்க்கும் க்ஷேமம், விளைவும் அதிகம். லாபம் ஜாஸ்தி. தேகதிடம் செல்வ விருத்தி. சும்மா வரியைக் குறைக்கணும், பர்மா அரிசி மேலே வரி ஜாஸ்தி போடு என்கிறதெல்லாம் ரொம்பதூரம் நமக்கு லாபமாகாது. சுயநலப் பேச்சுத்தான். தெரிஞ்சுதா? இப்போ இருக்கிற ஆணிக்கட்டை கலப்பையை விட்டெறியணும்டா. நல்ல தகுந்த இரும்புக் கலப்பைகளை வாங்கி உபயோகப் படுத்தணும். எரு சேகரிக்கிற விதமே வேறேயாச் செய்யணும். பூமிக்குத் தகுந்த எரு போடணும். அதற்குத் தகுந்த விதைகள் பயிரிடணும். நஞ்சையோடு, புஞ்சைப் பயிரும் செய்யணும். தோட்டப் பயிரும் வேண்டியதுதான்.

நமக்கு வேண்டியபயறு, உளுந்து, துவரை, கொட்டைமுத்து, மஞ்சள், சேம்பு, கரணை, வாழை, பருத்தி, கொள்ளு முதலியவைகளை நாமே விளைவிச்சுக்கணும். இதற்கெல்லாம் எப்படி மாறிமாறி அந்த நிலங்களில் பயிர் செய்யறது எல்லாம் கற்றுக் கொள்ளணும். இன்னும் அநேகம் விவசாய டிபார்ட்டுமெண்டு சொல்லும் அந்தமாதிரி எல்லாம் செய்யலாம். இந்தமாதிரி விருத்தி செய்வதை பிரத்தியக்ஷமாய்க் காண்பிப்பது. நம்ப சபை மெம்பர்கள் நிலத்திலாவது அல்லது சர்க்காரிடமிருந்து நமக்கும் கிடைக்கும் இடத்திலாவது நேருக்கு நேராப்பார்த்தால் எல்லாரும் சந்தேகமில்லாமல் செய்வாளோனே. (வரவும் செலவும் காண்பிச்சால்.) ரொம்ப லாபமாகவே யிருக்குமேயொழிய நஷ்ட மிருக்காது.

"கிராமத்திற்கு எந்தெந்த விதத்தில் மேன்மை செய்ய முடியுமோ' அவை களைச் செய்கிறது. நம்ம ஊர்களிலே பாய்ச்சல் வடிகால்முதல் மடை வாய்க்கால்கள் சரியாக எல்லாரும் ஒத்தாற்போல் சேர்ந்தாப் போலே வெட்டறதில்லே. அதனலே அநேக சங்கடங்கள். அதுவும் ஜலக்கஷ்டம் வந்து விட்டால் அடிதடி மண்டை உடையறது ரொம்ப ஜாஸ்திதானே. இப்போ யாதொரு கட்டுப்பாடு மில்லாததினல் அனியாயமாக இந்த வாய்க்கால்கள் தூந்துபோய், கோரை மண்டிக்கிடக்கு. இந்த சபை கட்டுப்படுத்தி ஒருமுகமாய் வேலெசெய்தால் நல்லதுதானே. இது நமக்கு முக்கியம்தானே. குளங்களும் குட்டைகளும் மாடு, கன்று குளுப்பாட்ட நன்ருயிருக்க வாண்டாமா? கால்வாய்கள் இல்லாத இடங்களுக்கு கால்வாய்கள் வாண்டாமா? ஊர்லே ஏதாவது குட்டைகள் நாத்த மெடுத்துப்போகிறது. கொசு, ஈ உபத்திரவம் அதனல் ஜாஸ்தியாயிருக்கு. அதை நிவர்த்தி பண்ண வாண்டாமா? அதை தூர்த்துவிட வேண்டும் அல்லது தண்ணீர் தேங்காமல் செய்யணும். இந்தமாதிரி விஷயங்களை கவனிக்கிறது."

"என் ஐயா வாய்க்கால் வெட்டறது. குட்டையைத் தூக்கிறது எல்லாம் சர்க்கார் செய்ய மாட்டாளா. நம்மகிட்ட வரி வாங்கிக்கிருள். பஞ்சாயத்து போர்டு இருக்கு சுகாதாரத்தைப் பார்க்க. நாம் கூலியும் குடுத்து வேலையையும் செய்ய வேண்டுமா?"

"நான்தான் முதல்லே யிருந்து சொல்றேனே. சர்க்காருக்கு காது கேட்கும்படி கத்தறதுக்கு யாரால் முடியும். கேட்டு தானல்கூட அவாளிடத்தில் பண மிருக்கணும். அதற்கு எஸ்டிமேட் (Estimate) போடணும். ஒரு மேலதிகாரி அவசியமானதா என்று பார்த்து அந்த எஸ்டிமேட் சரியா என்று தீர்மானம் செய்யணும். அப்புறம் பணம் இருந்தால் கண்ருக்ட்டுக்குப் பிரசுரம் செய்து விடணும். அந்த கண்ருக்ட்டுக்காரன் தனக்கு சௌகரியமான போது வேலையைச் செய்வான். அதுவரையில் அவஸ்தைப் படறவாள் நாம்தானே. வேலைக்காரன் வந்து முதுகு சொரியணும்னு யாரோ பெரியமனித னிருந்தாலும்! அந்த மாதிரி இல்லாமல் சட்டுப் பிட்டுன்னு நம்ம காரியத்தை நாம் முடிக்க வேண்டியது. என்ன பிரமாதம்! செய்துப்பிடலாம் நாமே கூடுமானவரையில் விளையாட்டா."

"அப்புறம்" "தொழிலாளிகள், வேலைக்காரன்கள் கூலிகள் பண்ணையாள்களைச் சரியாக குறித்தவேலைக்கு காலத்துக்கு வேலையை ஆரம்பிக்கச் சொல்றது. குறித்த வேளைக்கு விட்டு விடறது. சரியாக ஊகத்தோடு வேலை செய்விக்கிறது. அதற்குத் தகுந்த கூலி குடுக்கிறது (முன்னேற்பாட்டின் படி) இப்போ பண்ணை ஆளுக்கு $1\frac{1}{2}$ படி நெல் குடுக்கிருர்கள். வருஷக் கடைசியில் சுதந்திரம் என்றும் போரடி என்றும் மொத்த மாக் கொடுக்கிருள். இந்த கடைசி மொத்த நெல் வேலையில்லாத கோடைக்காலங்களுக்கு அவர்களுக்கு உபயோகப்பட. ஆனல் அவன்களுக்கு இது தெரிவதில்லை. இந்த $\frac{3}{4}$ மரக்கால் நெல்லுக்கூலி அவனுக்குப் போருது தான். அதினல் அவனுக்கு அதிருப்தி. சரியாக வேலை ஆகிறதில்லை. மிராசுதார்கள் திட்டுகிருர்கள். அவஸ்தைப்படருர்கள். ஜாஸ்தி குடுத்தாலோ மறுநாள் வேலைக்கு மக்கார்தான். (அநேகமா) இந்தமாதிரி இழுத்துப் புடுச்சுக் கொண்டு திண்டாடறதுகள் நம்ம ஊர்கள். ஆகையினல் ஏதாவது ஒரு ஏற்பாடு வாண்டாமா?

"ஊர் தொழில்கள் விருத்தி செய்யறது. அல்லது தொழில்கள் ஏற்படுத்துகிறது. அதில் வேலையில்லாதவர்களை வேலை செய்யச் சொல்லுகிறது. எப்படின்னு. பருத்தி போடுகிறேமல்லவா? அதை நூற்கச் சொல்றது. துணி செய்கிறது. நாமெல்லாரும் கட்டிக் கொள்ளுகிறது. நம்ம ஊரில் இருக்கும் கருமானே அரிவாள், மண்வெட்டி, இரும்புக் கலப்பை, சின்னக்கத்திகள், கத்தரிக்கோல், தச்சன் உளி வகையரு முதலிய துகளைச் செய்ய வைக்கிறது. நம்மில் சிலரும் கத்துக்கொள்றது. தச்சன் வழக்கத் தொழிலோடு, தரி, ராட்டினம், வண்டி முதலியதுகள் செய்யலாம். கன்னன் பாத்திரங்கள் தவிர (அதுவும் தற்காலத்துக்குத் தகுந்தாற்போலே) விளக்குகள், வாஷிங்டன், கிட்ஸன் லேட்கள், ஸ்டோவ் (Stoves) தட்டுகள் மாதிரி அநேகம் செய்யலாம். தட்டான்களை இன்னும் மேன்மையானதும் நுட்பமானதுமான உபயோகமுள்ள சாமான்களைச் செய்யச் சொல்லலாம். இவர்களெல்லாம் கொஞ்சம் முயற்சி யெடுத்தால், நாமும் கொஞ்சம் முதல் வைத்தோமானல் நன்னு விருத்தி செய்யலாம். சும்மா யிருக்கிறவா

(தொடரும்)




# ஓரே ஒரு சின்னக் கதை

வெகு காலத்திற்கு முன்பு ஜப்பான் தேசத்தில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் சோம்பேறிப் பையன்களுடன் சேர்ந்து ஊர்சுற்றிக் கெட்டுக் கழுதையானான். இருந்தாலும் அவனுடைய பெற்றோர்கள் அவனை அன்புடன் நேசித்து வந்தார்கள். ஆனால் அவனுடைய பந்துக்கள் கெட்ட நடத்தையுடைய அப்பையனை வீட்டைவிட்டுத் துரத்திவிட வேண்டுமென்று பெற்றோர்களைத் தொந்தரவுசெய்தார்கள். இதைக் கேட்ட பெற்றோர்கள் என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்தார்கள். அத்தேச வழக்கப்படி அச்சிறுவனைக் குடும்பத்திலிருந்து தள்ளிவைக்க அவன் வீட்டில் ஓர் கூட்டம் கூடிற்று.

சிறுவனுக்கு இது தெரிந்தது. தன்னுடைய சோம்பேறிச் சிநேகிதர்களுடன் சேர்ந்துகொண்டு தன் பெற்றோர்களைக் கண்டபடி திட்டினான். "என்னை விலக்கும் பட்சத்தில் எனக்கு நிறைய பணம் கொடுக்கும்படி நான் கேட்கப்போகிறேன்" என்று அச் சிறுவன் கூறினான். அவனுடைய நண்பர்களும் அவன் பணங் கொண்டுவந்தால், அவனுடன் சேர்ந்து தின்றுவிட்டு, பணம் ஆனபிறகு அவனைத் துரத்திவிடலாம் என்று எண்ணிக்கொண்டு அவனைக் குஷிப்படுத்தினார்கள்.

பணம் வாங்கும் பொருட்டு வீட்டுக்கு வந்தான் சிறுவன், கதவு மூடிக்கிடந்தது. உள்ளே உறவினர்கள் உட்கார்ந்துகொண்டு, பிள்ளையைத் தள்ளிவைக்கும்படி ஓர் பத்திரம் எழுதி, அதில் பெற்றோர்களைக் கையெழுத்துப் போடும்படிக் கேட்டுக்கொண்டதையும், பெற்றோர்கள் கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்துகொண்டிருப்பதையும் கண்டான்.

"அவன் கெட்டவனாக இருந்தாலும் கொஞ்சநாள் போனால் நல்லவனாய் விடுவான்" என்று தகப்பன் கெஞ்சினான்-

"கட்டாயம் நல்லவனாய் விடுவான், கொஞ்சம் பொறுத்துப் பார்க்கக் கூடாதா?" என்று தாய் அழுதுகொண்டே கெஞ்சினாள்:

ஆனால் உறவினர்களோ "அதெல்லாம் முடியாது, நீங்கள் மகனைத் தள்ளிவைத்துத்தான் ஆகவேண்டும்" என்று கண்டிப்பாய்க் கூறினார்கள். பெற்றோர்களுடைய குரல்கள் நடுங்கின. மகனை இந்தத்தடவை மன்னித்துவிடும்படி மன்றாடினார்கள், அழுதார்கள். இதற்கெல்லாம் உறவினர்கள் மசியவில்லை. அவர்களுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் பத்திரத்தில் கையெழுத்துப்போடத் தகப்பன் தயங்கினான்.

இதெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த சிறுவனுடைய மனம் இளகியது. பெற்றோர்களின் அன்பைக் கண்டதும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது. வாசற் கதவைத் திறந்தான்! ஓடோடியும் சென்றான். பெற்றோர்களின் காலில் விழுந்தான். அவர்கள் பாதங்களைக் கண்களில் ஒத்திக்கொண்டான். தான் அறியாமல்

செய்த குற்றங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். பெற்றோர்கள் அவனை எடுத்து இறுகத் தழுவி ஆசீர்வதித்தார்கள். அன்று முதல் அவன் அவ்வூரிலேயே நல்ல பையனென்று பெயரெடுத்தான்.

---

## துக்கணாண்டு கதை பாட்டி

ஓர் தகப்பனும் பிள்ளையும் படகிலேறி மீன் பிடிக்கச் சென்றார்கள். படகு வெகு தூரம் சென்றதும் சமுத்திரத்தில் புயல் பலமாக அடிக்க ஆரம்பித்தது, சமுத்திரம் கொந்தளித்தது. படகு ஓர் பாறையில் முட்டித் தண்ணீரில் அமிழ்ந்தது. தகப்பனும் பிள்ளையும் ஓர் சிறு மரத்துண்டைப் பிடித்துக் கொண்டார்கள். அம்மரத்துண்டு ஒருவரைத்தான் தாங்கும். இதைக் கண்ட பிள்ளை “அப்பா என்னால் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது. உன்னால்தான் முடியும். ஆகையால் இம்மரத்தின் உதவியால் நீ பிழைத்துப்போ, உபயோகமற்ற நான் இறந்து போகிறேன்” என்று சொல்லிக்கொண்டே தண்ணீருக்குள் மூழ்கினான். கொப்பளங்கள் துக்கத்தைத் தாங்க முடியாமல் கதறிக்கொண்டு வெடித்தன.

*　　*　　*

வாங் என்னும் சைனதேசச் சிறுவனுக்குத் தாயில்லை. ஆதலால் அவன் தன் தந்தையை அன்புடன் நேசித்து வந்தான். தந்தையின் சுகத்தையே நாடிவந்தான். கோடைகாலம் வந்தது. காற்று மருந்துக்குக்கூட அடிக்கவில்லை. அவனுடைய தகப்பனர் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தார். இதைக் கண்ட வாங் ஓர் விசிறியினால் தகப்பனருக்கு இரவு முழுவதும் விசிறிக் கொண்டிருப்பான். தகப்பனரும் நன்றாகத் தூங்குவார். குளிர்காலம் வந்தது. படுக்கையெல்லாம் சில்லிட்டுக் கிடந்தது. ஆதலால் வாங் முதன் முதலில் தகப்பனர் படுக்கையில் படுத்துப் புரண்டு அதற்குச் சூடேற்றுவான்.

ஹாலந்தில் ஜோன் என்றோர் சிறுவன் இருந்தான். அவன் குடும்பம் ஓர் ஏழைக் குடும்பம். அந்த தேசத்தில் கொசுக்கள் ஜாஸ்தியுண்டு. ஆனால் அக் குடும்பத்தாரால் ஓர் கொசுவலை கூட வாங்க முடியவில்லை. ஆதலால் அவர்கள் கொசுக்கடியினால் அவஸ்தைப் பட்டார்கள். பெற்றோர்கள் துன்பப்படுவதைக் கண்ட ஜோன் தன்னுடைய ஆடையை எடுத்துவிட்டு திறந்த வெளியில் படுத்துக் கிடந்தான். பெற்றோர்களின் மேலிருந்த கொசுக்களெல்லாம் இவனை மொய்க்க ஆரம்பித்தன. பெற்றோர்கள் நன்றாகத் தூங்கினார்கள்.

*　　*　　*

நடந்து களைத்துப்போன தேசாந்திரி ஒருவன் ஓர் ஆலமரத்தின் கீழ் படுத்திருந்தான். மரத்தில் ஓர் காக்கையும் கொக்கும் இருந்தன. சூரியன் மேற்கே போகப்போக மரநிழலும் சாயத்தொடங்கியது. சூரிய கிரணம் தேசாந்திரியின் மேல்பட்டது. இதைப் பார்த்த கொக்கு பிரயாணியின்மேல் இரக்கங் கொண்டு, பறந்து தன்னுடைய இறகினால் வெயில் பிரயாணியின்மேல் படாமல் சூரியனை மறைத்தது. மரத்திலிருந்த காகம் இதைப் பார்த்து ஏசிச் சிரித்துப் பிரயாணியின்மேல் ஓர் கல்லை எறிந்தது. கல்லடிபட்ட பிரயாணி எழுந்து, கொக்குதான் கல்லை விட்டெறிந்தது என நினைத்துக் கோபங்கொண்டு, வில்லை வளைத்து அக்கொக்கின்மேல் ஓர் அம்பை விட்டுக் கொன்றான். ஆதலால் துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்.

---

# புத்தக விமர்சனம்

## (லெனின்)

[ஆசிரியர்—வி. கிருஷ்ண ஸ்வாமி, எம்.ஏ. பிரசுரம் — நவயுகப் பிரசுராலயம். ஜி. டி. மதராஸ், விலை அணு 8:]

இந் நூல், உலகத்தில் ஆறிலொரு பாகமாக விளங்குவதும், பதினைந்து கோடி ஜனங்களுடன் கூடியதுமாகிய ரஷ்யாவுக்கு, ஜார் என்னும் கொடுங்கோல் மன்னனுடைய ஆட்சியினுல் விளைந்த, சிறைவாசம், தேசப்ரஷ்டம், அடக்கு முறை, பசி, பட்டினி, இல்லாமை முதலிய கொடுமைகளாகிய நோய்களை — பொது உடைமைத் தத்துவம், அபேதவாத லக்ஷியம் என்கிற ஔஷதங்களினுல் குணப்படுத்தி, ஏழை மக்களுக்காக அரசாங்கம் என்கிற ஓர் அற்புதப் பந்தரின் கீழ் அந் நாட்டை நிலை நிறுத்திய ரஷ்யப் புரட்சித் தலைவராகிய லெனின் என்னும் தேச பக்த சிரோமணியின் அதியற்புத லீலைகளை விளக்குவதாம்.

வயிற்றுப் பிழைப்புக்கு வக்கீல் தொழிலையும், ஆத்ம திருப்திக்கு அபேதவாதப் பிரசாரத்தையும் மேற்கொண்டுழைத்த இப்பெரியாரின் சரித்திரம், விநோத நூதன அரசியல் தத்துவங்களைக் குடிமக்களின் விடுதலைக் கேற்ற உபாயங்களுடன் விளக்குவதால், பெரிய நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்டு வழிதுறை தெரியாமல் விழிக்கும் தமிழுலகுக்கு — இது, இருள் நிறைந்த வனப் பிரதேசத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களின் முன் திடீரெனத் தோன்றிய ஒரு தனிப் பெருஞ் ஜோதிக் கொப்பாகும் என்பதிலையமில்லை.

தம்முடைய இருபத்து மூன்ருவது வயது முதல் ராணுவப்படை வீரர்களுக்கும், கப்பற்படை வீரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் தலைவராயிருந்ததுமன்றி, கைதியாகவும் தேசப்ரஷ்டராகவும் அக்ஞாதவாசியாகவுமிருந்து நாற்பத்தேழு வருஷகாலம் தம் நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட பரம தியாகியினுடைய இச் சரித்திரம், வருங் கால வாழ்க்கையாகிய கப்பலுக்கு வழி காட்டும் கலங்கறை விளக்கமென விளங்குமென்பது மிகையாகாது.

பாட்டாளி மக்களின் புரட்சி, முதலாளித்வத்தைத் தொலைக்கும் ஆற்றலுடையதென்பதை உலகுக்கு விளக்கவந்த லெனினுடைய மனைவியும் தன் நாயகனை யநுசரித்து உழைத்தார் என்கிற அதிசயச் செயல் மாதர்களின் உணர்ச்சியைத் தேசபக்தியிலீடுபடுத்துவது மல்லாமல், நாயகி நாயகனை அநுசரிப்பது பாதிவ்ருத்ய தர்மம் என்கிற உயரிய கருத்தையும் நினைவுக்குக் கொண்டுவரும்.

தேச பக்தியி லீடுபட்டுத் தங்களை மறந்துழைத்துப் புகழுடம்பை உலகத்தில் நாட்டியவர்களுடைய உயிரற்ற உடம்பும் கும்பிடும் தெய்வ விக்ரகமாகக் கொண்டாடப்படும் பெருமையுடையதாகும் என்பதை இந்நூலைப் படிப்பவர் நன்குணர்வர்.

சமயமறிந்து இந் நூலை, சாதாரண ஜனங்களும் எளிதிலுணரத் தக்க அழகிய நடையில் எழுதியுதவிய ஆசிரியருக்கும் பிரசுரகர்த்தருக்கும்

"காலத்தினுற் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"—

என்னும் வேதவாக்கின்படி இந் நூல் பெருமை தருவதாகும்.

இப் புத்தகத்தின் முகப்புப்படம் நம்மைப் பரவசமடையச் செய்கிறது. கண்ணைக் கவரும் நேர்த்தியான அமைப்பு (get up) இப் புத்தகத்துக் கமைந்திருப்பது ஒரு விசேஷ அம்சம். தகுதியென்று சொல்லத்தக்கபடி இப் புத்தகத்தின் விலையை யமைத்திருப்பது பாராட்டத் தக்கதாகும். அத்தியாயப் பிரிவுகளையும், அவைகளின் தலையங்கங்களையும் ஆசிரியர் உணர்ச்சிததும்பும் முறையில் அமைத்திருப்பது போற்றத்தக்கதாகும்.

# சினிமாச் சுருள்

'எஸ். எஸ்.'

ஸ்ரீ துவாரகநாத் அவர்கள் சிலகால மாகவே சொந்தப் படப்பிடிப்பில் வெகு வாக முனைந்திருக்கிறார் என்று தெரிகிறது. அதற்கு அறிகுறியாக, தற்காலம் சினிமா வானில், உலவிவரும், "பாக்ய தாரா"வே போதிய சான்றாகும். அப்படமானது இன்னும் சென்னை, ஸினிமா ரஸிகர்களுடைய மத்தியில் விஜயம் செய்யாததால், அதைப்பற்றித் தர்க்கிக்க இடமேயில்லை. கேள்விப் பட்டமட்டில் டைரக்ஷன் முதலியவைகள் நன்றாக இருக்கிறதெனத் தெரிய வருகிறது. தற்சமயம் ஸ்ரீ துவாரகநாத் தயாரித்துக் கொண்டிருக்கும் தானசூர கர்ண, ஒரு அருமையான, புராதனக் கதை. இதில் கன்னட நடிகையான, M. S. திரிபுராம்பா, கர்னனுடைய மனைவியாக நடிக்கின்றார். கன்னட நடிகை, தமிழ்ப் படத்தில் நடித்தால், சுகப்படுமா? என்று வாசகர்கள் ஐயுறலாம். ஆனால் கன்னட நடிகையான கண்ணாம்பாவும், ஹிந்தி நடிகையான, சாந்தா ஆப்தேயும் தமிழ்ப் படப் பிரபஞ்சத்தில், நுழைந்தும், நுழைந்துகொண்டும், நுழையவும் போகிறார்களென்றால், திரிபுராம்பாவின் பிரவேசம், ஆச்சர்யப்படத்தக்கதே இல்லை. படம் ஆரம்பித்ததும் தெரியாமல், நாள் ஓடுவதும் தெரியாமல், படப் பிடிப்பு, வெகுதுரிதமாக முன்னேறிக்கொண்டு வருகிறதாம். கிருஷ்ண பரமாத்மா, தூதின் நிமித்தம் அஸ்தினாபுரத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறாராம். வந்த சிரமம் தீர, விதுரருடைய கிருஹத்தில் சிறிது விஸ்ராந்தி செய்து கொண்டிருக்கிறாரென்றும் அறிகிறேன்.

* * *

மன்மதனுடைய விஜயத்தைக் கூடிய விரைவில் எதிர் பாருங்கள் என்ற பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்ததும், என்னையும் அறியாமல் தூக்கி வாரிப் போட்டது போலாகிவிட்டது. என்னடா! மன்மதனுடைய சேஷ்டை இல்லாவிட்டால், பூலோகத்தில் எல்லாரும், தேவர்களாகவும், தபோதனர்களாகவுமன்றோ இருக்கவேண்டும். அப்படியிருக்க, இவ்விஷயம் பற்றி, இக் கலியுகத்தில் யார் இதை நம்பமுடியும் என்று, முட்டாள் மனதிற்கும் எனக்கும் ஏற்பட்ட சர்ச்சையானது, பக்கத்தாத்து ராகவாச்சாரியின் திடும்பிரவேசத்தால் தடுக்கப்பட்டது. அப்பொழுது தான், நான் பார்த்தது சினிமா விளம்பரமென்றும், மதராஸ் பிரஸிடென்ஸி, அமெச்சூர் நடிகர்கள் அதில் நடிக்கிறார்களென்றும், அதில் பிரதானம் வாய்ந்தவர் ஸ்ரீமான் எம். சுப்ரமணிய அய்யர் எனவும் ஒருவாறு ஊஹித்தேன். பிறகு எனக்கு அவ்வித தப்பபிப்பிராயத்தை உண்டாக்கிய, மனதைத் திட்டிக்கொண்டே, மேற்கொண்டு ஆராய ஆரம்பித்தேன்.

* * *

வீனஸ் பிக்சர்ஸாரின் "கிராத-அர்ஜுனா" வெளியூர்களில், மிகவும் வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது, என்ற வதந்தி ஒன்று ரஸிகர்களிடையே பலமாய் வீசிக்கொண்டிருக்கிறது. ஆகவே, எப்பொழுது, நமது ஊருக்கும் அர்ஜுன சன்னியாசி விஜயம் செய்யப்போகிறாரென்று ஸினிமா ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கிய வண்ணமிருக்கிறார்களாம். இப்படத்தில், நாரதராக நடிக்கும், K. பவானி (சாம்பமூர்த்தி) இதுவரை, நாரதராக நடித்திருக்கும் எல்லா, நாரத நடிகர்களையும், சகல அம்சங்களிலும், அபேஸ் செய்துவிடுவாரென்றும் சொல்லப்படுகிறது. இதில் மற்றுமொரு விசேஷமென்னவெனில், திருக்கார வாசல், சுப்புலக்ஷ்மியின், கலாரஸிகர்களை சொக்குவிக்கும், பரத நாட்டியம்தானென்றும் சொல்லிக்கொள்ளப் படுகிறது.

* * *


கூடிய சீக்கிரம் மலர்ந்து எல்லோருக்கும் பரிமணம் வீசப்போகும் புஷ்பம்,

ரோஜாவோ அல்லது மல்லிகையோ என்ற பிரச்னை எழும்பி நிற்கும்போது அப் பிரச்னையின் விடையைக் கண்டுபிடிக்கச் சென்னை ஹாஜி அண்டு கம்பெனியார் தீவிர முயற்சிகள் செய்துவருகிறார்களாம். ரோஜாவாக யிருந்தால்—புராண தமிழ்ப் படமாம்—மல்லிகையாக யிருந்தால் சமூக தமிழ்ப்படமாம். ரோஜாவாகத் தான் இருக்குமென்று முக்காலே மூணு வீசம் அரைவீசம் பேர்கள் நினைக்கிறார்கள். நடிகர், நடிகைகள் தினே தினே வந்து போய்க்கொண்டிருப்பதாகவும் கேள்வி. ரஸிகர்களின் சந்தேகத்தை அதிகமாய் வளர வொட்டாமல், கூடிய சீக்கிரம் மேற்கொண்டு சமாசாரங்கள் வருமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மி இளம் சகுந்தலையாக மாறப்போகிறாரென்ற செய்தி கேட்டு ஓர் பேருவகை கொண்டேன். சுப்புலக்ஷ்மி சகுந்தலையானால், துஷ்யந்தன் யாராயிருக்கலாம் என ஆராய்ந்து சொல் என்று என் மூளைக்கு ஆக்ஞாபித்ததில், பாவம் ! புரட்டாத பத்திரிகைகளை எல்லாம் புரட்டி, கிராமபோன் புகழ் ஜி. என். பாலசுப்ரமண்யம் சகிதமாய் வந்து நின்றது. சரி, சரி. கோகிலகானத்திற்கு ஏற்றது கிராமபோன் கானம்தான் என்று நினைத்துக் கொண்டு இவர்களுடைய திரு அவதாரம், வாழ்க்கைச் சித்திரம் முதலானவைகளை பற்றிச் சிறிது ஆராய்ந்ததில் நியூடோனில் தான் நடைபெறப்போகிறது என்று தெரியவருகிறது.

* * *

மாயா உலகத்தை சக்தி மூவிடோன்காரர்கள் தங்களுடைய, மாயா சக்தியினால் சிருஷ்டிக்கப் போகிறார்கள் என்பதைக் கேட்டவுடன் என் சிந்தனா சக்தி என்ற சூத்திரக் கயிறின் உதவியினால் அவ்வுலகத்தின் சிருஷ்டிகர்த்தா யார் என்றும், மற்றும் அவருக்கு பக்கபலமாய் யார் யார் உதவியளிக்கிறார்கள் என்றும், அறிய முயன்றதில், சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால், நடிகர்களை இன்னும் தேர்ந்தெடுத்த வண்ணந் தான் இருக்கிறார்களாம்.



“தானசூர கர்ணா”வில் ஓர் காட்சி.

# இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :- மாயவரம்

செண்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ரூ. | 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் 20-10-39 | ... ரூ. | 18,23,832 |

சென்னை ஆபீஸ்கள்

அரண்மனைக்காரத் தெரு, சைனா பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

கிளை ஆபீஸ்கள்

| | | | |
|---|---|---|---|
| அனகபள்ளி | காஞ்சீவரம் | புதுக்கோட்டை | திருவாரூர் |
| பெர்ஹாம்பூர் | காரைக்குடி | சேலம் | திருச்சிராப்பள்ளி |
| கள்ளிக்கோட்டை | கும்பகோணம் | சீர்காழி | தூத்துக்குடி |
| சிதம்பரம் | மதுரை | தாடபள்ளிகூடம் | வேலூர் |
| கோயம்புத்தூர் | நாகப்பட்டணம் | தஞ்சாவூர் | விருதுநகர் |
| ஈரோடு | பாலக்காடு | திருநெல்வேலி | விஜயநகரம் |

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

**எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்**

(மானேஜிங் டைரக்டர்)



# பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணமலை
தலைமை ஆபீஸ்.

**59-A, லாய்ட்ஸ் ரோடு,***
ராயப்பேட்டை, மதராஸ்.
(பிராஞ்சு)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

## முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல்டிஸ்டிரிபியூடர்ஸ் : **ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

**அப்பா அண்டு கம்பெனி,** மதறாஸ்.

**T. N. நாகலிங்கம் பிள்ளை,** மதுரை.

**மீனாக்ஷி ஸ்டோர்ஸ்,** தேவகோட்டை.

**T. N. சொக்கலிங்கம் பிள்ளை,** அண்டு சன்ஸ், மதுரை.

* டாக்டர் பரசுராம் அவர்கள் மதராஸ் வாசிகளின் சௌகரியத்தின் பொருட்டுப் பலர் வேண்டுகோளுணங்கி; ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1-ம் தேதிமுதல் 10 தேதிகள்வரையில் பிராஞ்சு ஆபீஸில் தங்குவார்.